

# மாணவர்களே காதலியுங்கள்.....

▪ வெளிச்சம் **ஷெரின்**

# மாணவர்களே காதலியுங்கள்...!

வெளிச்சம் ஷெரின்

வெளிச்சம்
39, ஃபாக்ஸன் தெரு, பெரம்பூர்
சென்னை - 600 011

முதல் பதிப்பு : 14, பிப்ரவரி 2012
உரிமை : ஆசிரியருக்கே

மாணவர்களே காதலியுங்கள்...!

■ கட்டுரைகள் ■ வெளிச்சம் ஷெரின் ■ முதல் பதிப்பு 2012 ■ வெளியீடு: வெளிச்சம், 39, ஃபாக்ஸன் தெரு, பெரம்பூர்,சென்னை-600011. ■ அட்டை வடிவமைப்பு : சிகா ■ ஓவியங்கள் : செ.இளஞ்செழியன் ■ நூலமைப்பும் அச்சும் : விஜி வரைகலை, சென்னை-24.

---

MAANAVARGALE KAATHALIYUNGAL ■ Essays ■ Velicham SHERIN ■ Language : Tamil ■ First Edition : February 2012 ■ Size : Demmy 1/8 ■ Paper : 18.6 Maplitho ■ Published by : Velicham 39, Foxen Street, Perambur, Chennai-11. Phone : 9500162127 ■ Cover Design : Siga ■ Layout & Printed at : Viji Graphics, Chennai-24. ■ Price : 100/-

---

நூல் பெற : 9698151515, 9500162127

---

விலை : ரூ. 100/-

இந்தப் புத்தகம் உங்கள் காதலுக்கு பதில் சொல்லும்
உங்கள் பணம் எங்கள் வாழ்க்கைக்குப் பதில் சொல்லும்

கல்விக் கனவுகளுடன்...
**வெளிச்சம் மாணவர்கள்**

இந்நூல்...

உடலில் எழும் நியாயமான உணர்வுகளைக் கையாளத் தெரியாமல், வாழ்க்கையில் தோற்றுத் தற்கொலை செய்துகொண்ட மாணவர்களுக்கும், தற்கொலையும் செய்யமுடியாமல், படிப்பிலும் கவனம் செலுத்தமுடியாமல் பரிதவிக்கும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கும்...

# என்னுரை

“மனசு கஷ்டமாயிருக்கு, படிக்கவே பிடிக்கல. காதலிக்கணும்னு தோணுது... காதலே வெறுப்பா யிருக்கு... நான் காதலிக்கிறவன் நல்லவனா? கெட்டவனானு தெரியல... அவன் எனக்கு நண்பனா? காதலனா? இல்ல என்னை ஏமாத்திடுவானோன்னு குழப்பமாயிருக்கு... பாலியல் தொந்தரவு செய்யும் அப்பா, மாமா மற்றும் உறவினர்களை என்ன செய்றதுன்னு தெரியல... என் காதலி என்னை ஏமாத்திடுவாளோன்னு பயமாயிருக்கு... காரணமே தெரியாம மனசு கஷ்டமாயிருக்கு... சினிமாவுல வரும் காதல் காட்சியைப் பார்க்கும் போது எனக்கும் காதலன் இல்லையே, காதலியில்லையேனு மனசு தவிக்குது... நான் எந்தத் தப்புமே செய்யல, எப்பப்பாத்தாலும் எங்க அப்பா, அம்மா மற்றும் உறவினர்கள் சந்தேகப்பட்டு என்னைத் திட்டிக் கிட்டேயிருக்காங்க அதனால, செத்துறலாம்போலத் தோணுது”

- இதையெல்லாம் நான் உங்ககிட்ட சொல்லலங்க... மாணவர்கள் என்கிட்ட சொன்னதுதான்.

என்ன செய்ய?

பரீட்சையில பாஸ் பண்ணக் கற்றுக் கொடுத்த கல்வி, வாழ்க்கையில பாஸ்பண்ணக் கற்றுக் கொடுக்கவில்லை!

மிருகங்களை நேசிக்க கற்றுக் கொடுத்த கல்வி, சக மனிதர்களை நேசிக்கக் கற்றுக் கொடுக்க வில்லை!

உணவிலும் உடையிலும் மட்டும் மேற்கத்திய கலாச்சாரத்தைக் கற்றுக்கொண்ட நாம், மன தைரியத்தையும் சிந்திக்கும் ஆற்றலையும் கற்றுக் கொள்ளவில்லை!

மாணவர்களின் மனக் குழப்பத்திற்கும், அவர்களுக்குள் எழும் கேள்விகளுக்கும் இந்தப் புத்தகத்தின் ஏதாவது ஒரு பக்கத்திலாவது தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இந்தச் சிறிய நூலைச் சமர்ப்பிக்கிறேன்.

களப்பணியில்

வெளிச்சம் ஷெரின்

## உள்ளடக்கம்


- உனக்காகத்தான் செல்லம்... 7
- காதலை ஏன் எல்லோரும் வெறுக்கிறார்கள்? 10
- காதலைப் பற்றிப் பேசாமல் இருப்பதன் விளைவு... 19
- காதலிப்பது சரியா? தவறா? 28
- ஒரு ஆண்/பெண் நல்ல நண்பர்களாக இருக்க முடியுமா? 37
- நான் பழகும் ஆண் நல்லவரா, கெட்டவரா? 41
- ஏமாற்றும் பெண்ணைத் தெரிந்து கொள்ள... 48
- பெற்றோர்களின் உறவு என்னைப் பாதிக்கிறது 54
- பாலியல் தொந்தரவு செய்யும் அப்பா 60
- பாலியல் உணர்வைத் தூண்டிவிடும் ஊடகம் 66
- ஆசிரியர்கள் மீது காரணமில்லாக் கோபம் ஏன்? 70
- தாழ்வு மனப்பான்மையைப் போக்க 75
- மனதில் இனம் தெரியா வேதனை 80
- மாணவர்களே காதலியுங்கள்! 87



## உனக்காகத்தான் செல்லம்...

உன் வாழ்க்கைப் பயணத்தில் உன்னை நீ எந்த அளவிற்கு நேசிக்கிறாய் என்பதைக் கண்டறிய, இதிலுள்ள ஒவ்வொரு எழுத்துக்களும் உன்னோடு பேசும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் அடிப்படை தேவை உணவு, உடை, இருப்பிடம், கல்வி இவைகளுடன் சேர்த்து, வளர்ந்துவரும் விஞ்ஞான வளர்ச்சியில் செல்போனும், மனித வளர்ச்சியில் காதலும் முக்கியமாகிவிட்டன.

இந்தப் புத்தகத்தின் மூலமாக உங்கள் மனதோடு பேசுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். அடிப்படையில் நான் ஒரு எழுத்தாளர் அல்ல. ஆனால், வேறு வழியில்லாமல் எழுதியே ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தால் இதை எழுதுகிறேன். வெளிச்சம் என்ற அமைப்பை உருவாக்கி அதன் மூலம் சுமார் 500-க்கும் மேற்பட்ட ஏழை மாணவர்களைப் பல நல்ல உள்ளங்களின் உதவியோடு உயர் கல்வி படிக்க வைத்துக்கொண்டிருக்கிறேன். அவர்களின் படிப்பிற்கு மட்டும் உதவி செய்யாமல் அவர்கள் தன்னம்பிக்கையோடு வாழ, அவர்களுக்குள் எழும் தற்கொலை எண்ணங்களை மாற்ற பல பயிற்சிகளைக் கொடுத்து வருகிறேன். தமிழகத்தில் ஒரு வருடத்திற்கு 5000 மாணவர்கள் தற்கொலை செய்து கொள்கிறார்கள் என்ற செய்தியை அறிந்து கடந்த வருடம் மாணவர் தற்கொலைகளைத் தடுக்க வேண்டும் என்பதற்காகவே மாணவர் உதவி எண்ணை (Students Help Line 9698151515) ஏற்படுத்தித் தமிழகம் முழுவதும் ஒரு பிரச்சாரப் பயணம் மேற்கொண்டோம். மாணவர் உதவி எண்ணுக்கு பல கேள்விகள் வந்து குவிந்தன. அதைக் கண்டு அதிர்ந்து போனேன்! ஆச்சரியப்பட்டேன்! ஏனென்றால்? மாணவர்கள்

என்னிடம் எழுப்பிய கேள்விகள் அனைத்தும் காதல் சம்பந்தப்பட்டவை; உணர்வு சம்பந்தப்பட்டவை; நியாயமானவை. ஒரு பயிற்சியில் எட்டாம் வகுப்பு மாணவி கேட்டாள்:

“நீங்க சொல்வதெல்லாம் புரியுது அக்கா. ஆனால், எனக்கு ஏன் காதலிக்கணுமுன்னு தோணுது?”

இப்படி அத்தனை சந்தேகங்களும், கேள்விகளும் காதலை மையமாகக் கொண்டே இருக்கிறது. யாரிடமும் கேட்க முடியாமல், பெற்றோர்களிடமும் பகிர்ந்துகொள்ள முடியாமல் தவிக்கின்றார்கள் மாணவர்கள். ஒருபுறம் ‘காதல்’ பேசப்படக் கூடாத, கெட்ட வார்த்தை, காதலித்தால் பெரும் குற்றம்.

“நீ எவனையாவது காதலிச்சா நான் தற்கொலை செய்து கொள்வேன்” என்கிறாள் அம்மா.

“நீ எவளையாவது காதலிச்சா உன்னைக் கொன்னுடுவேன்” என்கிறான் அண்ணன்.


மறுபுறம் சங்க இலக்கியம் முதல், புராணக் கதைகள் வரை அன்றைய நாடகம் முதல், இன்றைய சினிமா வரை, எங்கும் காதல், எதிலும் காதல். காதல் ஒன்றோடொன்று பின்னிப் பிணையப்பட்டிருக்கிறது.

எங்கு பார்த்தாலும், எதைக் கேட்டாலும் அதிகமாகக் கேட்கப்படும், பேசப்படும் சொல், காதல்! காதல்! காதல்!

பேசக் கூடாத, விவாதப் பொருளாகாத, ஒளிவு-மறைவாக்கப்பட்ட காதல் எப்படி ஒவ்வொரு மனிதனின் இரத்தத்திலும் கலந்தது. ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கைப் பயணத்தில் காதல் எப்படி தொடர்ந்து பயணம் செய்கிறது. பெரும்பான்மையான மாணவர்கள் காதலுக்காகவே தற்கொலை செய்துகொள்கின்றனர். ஒவ்வொரு மாணவனும் காதலைச் சரியாகப் புரிந்துகொண்டு, வாழ்வில் வெற்றி பெற வேண்டும் என்பதே எனது ஆசை. இது வெறும் எழுத்து அல்ல! ஒவ்வொரு மாணவ, மாணவியின் வாழ்க்கை அனுபவம்.

**“ஒவ்வொருவரும் உலகத்தை மாற்ற நினைக்கிறார்களே யொழிய தம்மை மாற்றிக்கொள்ள நினைப்பதில்லை!”**

—ஆப்ரகாம் லிங்கன்





## காதலை ஏன்
## எல்லோரும் வெறுக்கிறார்கள்?

எந்த ஒரு விஷயத்தைக் குறித்தும் ஆழமான புரிதல் இருந்தால் எந்தக் குழப்பமும் இல்லை; பயமும் இல்லை; வெறுப்பும் இல்லை.

காதல் என்ற வார்த்தை இன்று பெரும்பான்மையான சமூகத்தினரால் வெறுக்கப்படுகிறது. அதற்கு என்ன காரணம்? காதல் என்றால் என்ன? காதலுக்கு என்ன அர்த்தம்?

ஆங்கிலத்தில் காதலுக்கு 'லவ்' Love என்று ஒற்றை அர்த்தம்தான் உள்ளது. 'லவ்' என்றால் அன்பு. ஆனால் தமிழில் Love என்பதற்கு, அன்பு, பாசம், நேசம், காதல் என பல அர்த்தங்கள் உண்டு. அன்பு, பாசம் என்றால் யாருக்காவது கோபம் வருகிறதா? இல்லையே. ஆனால் காதல் என்றாலே எல்லோருக்கும் வெறுப்பு வருகிறது.

அன்பு (Love) இல்லாமல் மனிதச் சமூகம் இருக்க முடியாது.

அன்பு மிகவும் அழகானது!<br>
அன்பு எல்லாவற்றையும் நம்பும்!<br>
சகலத்தையும் தாங்கும்!<br>
யாரையும் ஏமாற்றாது!<br>
யாரிடமும் கோபித்துக் கொள்ளாது!<br>
ஈகோ பார்க்காது!<br>
அன்புக்கு மரணம் இல்லை!<br>
அன்புக்குப் பணம் முக்கியமில்லை!

அன்பு மனதோடும் உணர்வோடும் கலந்தது!

மனதோடும் உணர்வோடும் கலந்த அன்பு ஒவ்வொரு மனிதனையும், ஒவ்வொரு நிமிடமும், மன அமைதியோடும், அக மகிழ்ச்சியோடும் வாழ வைத்துக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட அன்பை, காதல் என்று எழுதியவுடன் எல்லோர்க்கும் கோபம் வருகிறது.

இதற்கெல்லாம் என்ன காரணமென்றால், காதல் என்ற வார்த்தை, இன்று காமமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

எனவே, I Love You என்று சொல்லக் கூடாது. I Sex You என்றுதான் சொல்ல வேண்டும். நான் உன்னைக் காதலிக்கிறேன் என்று சொல்லக்கூடாது. நான் உன்னைக் காமத்திற்கு அழைக்கிறேன் என்றுதான் சொல்ல வேண்டும். நான் உன்னைக் காதலிக்கிறேன் என்று சொன்னால் மேலே சொன்ன அத்தனை குணங்களும் அவர்களிடம் இருக்க வேண்டும். பாடப்புத்தகம் கல்வியைக் கற்றுக் கொடுக்கிறது, பணம் சம்பாதிக்கக் கற்றுக் கொடுக்கிறது. ஆனால், மனிதத்தைக் கற்றுக் கொடுக்கவில்லை.

ஒவ்வொருவரும் தனக்குத் தெரிந்த புத்தகங்களி லிருந்தும், தான் பார்க்கும் ஊடகங்களிலிருந்தும், வளர்ந்து வரும் சூழலிலிருந்தும் தானாகவே, அன்பு, பாசம், நேசம், காதல், காமம்... என எல்லாவற்றையும் கற்றுக்கொள் கிறார்கள்.

முரண்பாடான சமூக அமைப்பில் ஒருபுறம் காதலைப் பற்றியோ, செக்ஸ் பற்றியோ பேசவே கூடாது என்கிறார்கள் பெற்றோர்கள்; விவாதிக்கவே கூடாது என்கிறது கல்வி நிறுவனங்கள்; கலந்துரையாடல் கூடச் செய்யக்கூடாது என்கிறது சமூக அமைப்பு.

அடிப்படையில் இதற்கெல்லாம் காரணம் என்ன?

பயம்.

ஒவ்வொரு பெற்றோரும் பள்ளிக்கூடத்திற்கோ, கல்லூரிக்கோ தன் மகளை அனுப்பி வைத்து விட்டு அவள் வீடு திரும்பும் வரை வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

"என்ன பண்றது, பொம்பள புள்ளைய பெத்துட்டேனே!" என்று எப்போதும் ஒரு பயத்துடன் வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள்.

மறுபுறம் சினிமா, இண்டர்நெட், டிவி, புத்தகம், பாடல் என அனைத்தும் அதிகபட்சம் காதலையே மையமாகக் கொண்டிருக்கிறது. பொழுதுபோக்கு என்றாலே டிவிக்கு முன்பாகத்தான் குடும்பத்தோடு அமர்ந்திருக்கிறோம். விடுமுறை நாட்கள் என்றவுடன் ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் குழந்தைகளை சினிமா தியேட்டருக்குத்தான் அழைத்துச் செல்கிறார்கள். அவைகளில் காதல் காட்சியே வரவில்லையா? மாலை நேரங்களில் வரும் எல்லா டிவி தொடர்களிலும் காதல் காட்சி இடம்பெறவில்லையா?

பாலியல் கல்வியைக் குறித்துப் பேசினால் சமூகம் கெட்டு விடும், ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பாடு இல்லாமல் போய்விடும் என்று கூறும் நம்நாட்டில் சமீபத்திய தீர்ப்பு, 'ஒரு பெண் விரும்பினால் இன்னொரு பெண்ணை திருமணம் செய்து கொள்ளலாம்' என்று சொல்கிறது. 18 வயதுக்கு மேல் அவள் மேஜர். அவள் யாரை வேண்டு மானாலும், காதலிக்கலாம், யாரை வேண்டுமானாலும் திருமணம் செய்து கொள்ளலாம் என்பதே இன்றைய சட்டவிதி. இது முற்றிலும் முரண்பாடாக இல்லையா?

செக்ஸ் கல்வி பற்றிப் பேசினால் இன்றைய மாணவர்கள் கெட்டுவிடுவார்கள் என்று சொல்லிவிட்டு, "அந்தரங்க ரகசிய கேள்விகள் என்று சொல்லி, இரகசியமாகக் கேட்க வேண்டிய கேள்விகளை பகிரங்கமாக வெளிச்சம் போட்டுக் காட்டும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை மாணவர்கள் பார்க்க மாட்டார்களா?

குழந்தைகள் படிக்க வேண்டும் என்பதற்காக வசதியானவர்கள் கம்ப்யூட்டர் வாங்கி நெட் கனெக்ஷனோடு வீட்டில் வைத்திருக்கிறார்கள். ஆனால், நாம் இல்லாத நேரத்தில் தவறான படங்களை நம் குழந்தைகள் பார்த்து விடுவார்களோ? என்று எல்லா பெற்றோர்களும் பயந்துகொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியும், இண்டர்நெட்டில் எந்த அளவிற்கு நல்ல செய்திகள், அறிவு சார்ந்து இருக்கின்றனவோ அதே அளவிற்கு மனிதனை அறிவில்லாதவனாக்குவதற்கான அனைத்து ஆபாசங்களும் இருக்கின்றன என்று.

2011 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தின் இறுதியில், இந்த வருட சாதனைகள் என்று துறைவாரியாக உலக அளவில் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட முடிவுகளை ஒரு தனியார் தொலைக்காட்சி வெளியிட்டது. அதில் இண்டர்நெட்டை பயன்படுத்தியதில் உலகிலேயே இந்தியா முதலிடம் வகிக்கிறது. மாநில வாரியாக ஆய்வு செய்த போது தமிழகம் முதலிடம் பெறுகிறது. இணையத்தில் என்ன தேடியிருக் கிறார்கள் என்று பார்த்தால் sex என்பது குறிப்பிடத்தக்கது.

கோயமுத்தூரில் ஒரு தனியார் பள்ளியில் படிக்கும் பத்தாம் வகுப்பு மாணவி அனுவுக்கு இண்டர்நெட் மூலம் ஒரு boy friend கிடைக்கிறான். அவளின் அப்பா இறந்துவிடுகிறார். அம்மா ஒரு தனியார் கம்பெனியில் வேலை செய்கிறார். ஒரு வருடமாக இருவரும் பார்க்காமலே காதலிக்கிறார்கள். ஒரு வருடத்திற்குப் பிறகு இருவரும் சந்தித்து மிக நெருக்கமாக பழகிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு நாள் அனுவின் அம்மாவிற்கு அவளின் காதல் விவகாரம் தெரிய வருகிறது.

“அடிப்பாவி என் நம்பிக்கையை கெடுத்திட்டியே. உனக்காக தானடி வாழ்ந்தேன். உங்கப்பா செத்த பிறகு உன்ன எப்படியெல்லாம் கஷ்டப்பட்டு வளர்த்தேன். என்னை ஏமாத்த உனக்கு எப்படி மனசு வந்துச்சு” என்று வேதனைப்படுகிறாள்.

ஆனால் அனு எதைப்பற்றியும் கவலைப்படாமல், "என்ன நீ ரொம்ப ஓவரா பண்ற. நான் அவனைத்தான் காதலிக்கிறேன், அவனைத்தான் கல்யாணம் பண்ணிக்குவேன்" என்கிறாள். வேறு வழியில்லாமல், இவ்வளவு அழுத்தமாக பதில் சொல்கிறாளே என்று எண்ணிய அம்மா, அவளது நெருங்கிய தோழிகளிடம் அவளின் காதல் விவகாரத்தை விசாரிக்கிறாள். அதிர்ச்சியான தகவல்கள் கிடைக்கின்றன. அனு இரண்டு மாதம் கர்ப்பமாக இருக்கிறாள் என்று தெரிந்தவுடன், தற்கொலை செய்துகொள்ள முயற்சிக்கிறார் அம்மா.

பயந்து போன அனு, "அம்மா செத்துராதம்மா. என்ன விட்டுப் போயிராதம்மா. அவன் ரொம்ப நல்லவம்மா. நான் நாளைக்கு உன்ன அவன்கிட்ட கூட்டிட்டுப் போறேன், நீ பேசி கல்யாணத்தை முடிச்சு வைம்மா" என்று கெஞ்சுகிறாள்.

விடிந்தவுடன் அந்தப் பையனைப் பார்க்க இருவரும் செல்கிறார்கள். மீண்டும் ஒரு அதிர்ச்சி காத்திருக்கிறது, அவன் ஏற்கனவே திருமணம் ஆனவன். அனுவுக்கும் அதிர்ச்சி. அவன் சட்டையை பிடித்து, "அடப்பாவி என்னை ஏமாத்திட்டியே, நீ நாசமா போயிடுவ" என்று சாபம் விட்டுவிட்டு வீடு திரும்புகிறார்கள். என்ன செய்வதென்று தெரியாமல் இருவரும் தற்கொலைக்கு முயற்சி செய்கிறார்கள்.

அதை பக்கத்து வீட்டுக்காரர் பார்த்துவிட்டு, "அடிப் பாவிகளா என்ன காரியம் செய்ய இருந்தீங்க" என்று மன ஆறுதல்படுத்தி அவர்களை வேறு ஊருக்கு அனுப்பி வைத்துவிடுகிறார். சொந்த ஊரில் இருந்தால், தன் மகளின் மனம் பாதிக்கப்படும் என்ற காரணத்திற்காக, உறவினர் களிடம் வேறு பல காரணங்களைச் சொல்லிவிட்டு, ஒரு தனியார் மருத்துவமனையில் அபார்ஷன் செய்துவிட்டு, இன்றைக்கு தனியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தற்போது அரசுப் பள்ளியில் படிக்கும் அனுவைப் பார்த்து,

“உனக்கு இன்னொரு வாழ்க்கை இருக்கிறது, கவலைப் படாதே” என்று ஆறுதல் சொல்லிவிட்டு வந்தேன்.

இதேபோல, ஒரு பள்ளியில் காலையில் அசெம்ப்ளி நடக்கிறது. ஒரு மாணவி மயக்கம் போட்டு விழுந்து விடுகிறாள். தலைமை ஆசிரியை, ஒரு டாக்டரை அழைத்து “அடிக்கடி அசெம்பளியில் மாணவிகள் மயக்கம் போட்டு விழுந்துடுறாங்க. அதனால ஒரு ஜெனரல் செக்கப் எடுங்க” என்கிறார்.

9, 10, 11, 12-ஆம் வகுப்பு படிக்கும் மாணவிகளுக்கு ஜெனரல் செக்கப் நடத்தப்படுகிறது. டாக்டர் ரகசியமாகத் தலைமையாசிரியையிடம், “இருபது மாணவிகளுக்கு மேல் கர்ப்பமா இருக்குறாங்க. தயவுசெய்து உடனடியாக எதாவது நடவடிக்கை எடுங்க” என்று சொல்கிறார். பள்ளியின் பெயர் கெட்டுவிடக் கூடாது என்பதற்காகத் துரிதமாக நடவடிக்கை எடுக்கபபட்டது.

ஒரு பிரபலமான தனியார் பள்ளி. அதில் ஒன்பதாம் வகுப்பு படிக்கிறான் ரஞ்சித். அவன் மீது சிறப்புக் கவனம் செலுத்துகிறார் வரலாற்றுப் பாட ஆசிரியை.

“ரஞ்சித் லீவுன்னா வீட்டுக்கு வாடா” என்று செல்லமாகச் சொல்கிறார் டீச்சர். எப்ப நேரம் கிடைத்தாலும் ஹிஸ்டரி டீச்சர் வீட்டில்தான் இருப்பான் அவன். சின்னப் பையன் தானே என்று எதார்த்தமாக இருந்துவிட்டார் டீச்சரின் கணவர்.

ஒரு நாள் இருவரையும் படுக்கை அறையில் பார்க்கக் கூடாத நிலையில் பார்த்து விடுகிறார் கணவர். ரஞ்சித்தின் பெற்றோரை வரவைத்து, “உங்கள் பையன் இனிமேல் அந்தப் பள்ளிக்கூடத்திற்கு போகக் கூடாது” என்று கோபமுடன் கூறுகிறார்.

ஆனால், ரஞ்சித்தின் பெற்றோர், “நீ வேணும்னா உன் பொண்டாட்டியை அடக்கி வைச்சுக்கோ என் பையன் அந்தப் பள்ளிக்கூடத்தில்தான் படிப்பான்” என்கின்றனர்.

இந்த விவரம் பள்ளிக்குத் தெரியவர, நிர்வாகம் அவர்கள் இருவரையும் பள்ளியை விட்டு அனுப்பி விடுகிறது.

இதை எழுதிக்கொண்டிருக்கும் இந்த நாளில் காலை 10 மணிக்கு ஒரு போன். அதில், “என் பெயர் திவ்யா, நான் ராமேஸ்வரத்திலிருந்துப் பேசுகிறேன். எனக்கு ஒரு முக்கியமானப் பிரச்சனை, அதைப்பத்தி உங்ககிட்ட பேசலாமா?” என்று ஒரு குரல்.

“என்னம்மா சொல்லு” என்றேன்.

“மேடம் என் தங்கை பெற்றோருடன் தங்கிப் கோய முத்தூரில் இரண்டாமாண்டு பி.காம் படித்து வருகிறாள். என் தங்கச்சி வயிறு வலிக்குதுனு சொன்னவுடன் அம்மாவும், அப்பாவும் அவளை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றிருக்கிறார்கள். அங்கே அவள் ஒன்பது மாதம் கர்ப்பமாக இருப்பதாக டாக்டர் கூறியிருக்கிறார். இதனால் கோபமடைந்த என் அப்பா அவளைக் கம்பியால் சூடுவைத்து, உடலளவிலும், மனதளவிலும் மிகவும் கொடுமைப்படுத்தி வருகிறார். எனக்குத் திருமணம் ஆகிவிட்டதால் என் கணவரிடமும் இதைப் பற்றிச் சொல்ல முடியவில்லை. நீங்கதான் ஏதாவது சொல்லணும் மேடம்” என்று கேட்டுக்கொண்டாள்.

அவளிடம், அவளது தங்கையின் மொபைல் நம்பரை வாங்கி தொடர்புகொண்டேன். ஆறுதலாக ஒரு சில வார்த்தைகள் பேசிவிட்டு, “உன்னைக் கெடுத்த அந்தப் பையன் யாரும்மா? சொல்லு” என்றேன்.

“சத்தியமா எனக்குத் தெரியலை மேடம். நான் ஒருமுறை கல்லூரியிலிருந்து கேரளாவிற்கு டூர் போனபோது எனக்கு பயங்கர வயிற்றுவலி ஏற்பட்டது. என்னுடைய ஃப்ரெண்ட்ஸ் ஒரு மாத்திரை வாங்கிக் கொடுத்தாங்க. கிட்டத்தட்ட நான்கு மணி நேரம் அப்படியே தூங்கிவிட்டேன். மீண்டும் அவர்கள் வந்து என்னை என்னடி இப்படி தூங்கிக்கிட்டு இருக்க என்று என்னை எழுப்பினாங்க. அதற்குப் பிறகு என்ன நடந்ததுன்னு தெரியலை மேடம்” என்றாள் அந்தப் பெண்.

ஆனால், அவளது பெற்றோரோ அவளுக்கு சூடு வைத்து சித்ரவதை செய்திருக்கின்றனர். பின்பு பிரசவ வேதனை வந்து அவளை தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கிறார்கள். ஒரு அழகான ஆண் குழந்தை பிறக்கிறது. என்ன செய்வதென்று தெரியாமல் என்னைத் தொடர்பு கொண்டார்கள். குழந்தையை அரசுக் காப்பகத்தில் ஒப்படைக்க ஏற்பாடு செய்தேன்.

முகமே தெரியாதவனைக் காதலித்த அனு!

தனது ஆசிரியையால் பலியாக்கப்பட்ட ரஞ்சித்!

படிக்கும் வயதில் கர்ப்பத்தைச் சுமக்கும் மாணவிகள்!...

குழந்தையைப் பெற்று அப்படியே அரசுக் காப்பகத்தில் விட்டுவிட்டு வீடு திரும்பிய கல்லூரி மாணவி!

- இப்படி தினமும் பல சம்பவங்கள் நம்மைச் சுற்றி நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இதுபோன்ற சம்பவம் என் குடும்பத்தில் நடந்துவிடக் கூடாது என்று அஞ்சி, ஒவ்வொரு பெற்றோரும் தங்களது பிள்ளைகளிடம் காதலைப் பற்றிப் பேச மறுத்து விடுகிறார்கள். இதுபோன்ற சம்பவங்கள் எங்கள் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் நடந்துவிடக் கூடாது என்பதற்காக மாணவ மாணவிகளிடம் காதலைப் பற்றி பேச மறுக்கிறது கல்வி நிறுவனங்கள். காதலைப் பற்றி வெளிப்படையாகப் பேசினால் பண்பாடு கெட்டு விடும் என்று பயப்படுகிறார்கள் இந்தப் ‘பண்பாட்டுக் காவலர்கள்’. என்னதான் பயந்தாலும் நடப்பது என்னவோ நடந்து கொண்டுதான் இருக்கின்றன. எனவே எதை எப்படி புரிந்து கொள்கிறோம், எப்படி ஆய்வு செய்கிறோம் என்பது அறிவைப் பொறுத்தது.

**“அறிவு மட்டுமே பயத்தைப் போக்கும் அரிய மருந்து”**



காதலைப் பற்றியும் உணர்வுகளைப் பற்றியும் பேசாமல் இருப்பதன் விளைவு

இன்றைய காலகட்டத்தில் மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்குமான இடைவெளி அதிகமாகிவிட்டன. ஒரு சில மாணவர்கள் பெற்றோரிடம் அதிகமாக பேசுவதையும், பகிர்ந்து கொள்வதையும், குறைத்துக் கொண்டார்கள். அப்படியே பெற்றோர்கள் குழந்தைகளிடம் பேசினாலும், அவர்களின் உரையாடல்கள் பெரும்பாலும் பாடம், அறிவு சம்பந்தப்பட்டவை. மனதைக் குறித்தும், உணர்வைக் குறித்தும் இன்று யாரும் பேசுவதில்லை. உணர்வு என்பது தொடுதல் மூலமாக பிறக்கிறது. எனவே மிக அடிப்படையாகத் தெரிந்து கொள்ள வேண்டியது தொடுதல்.

Good Touch (நல்ல தொடுதல்) Bad Touch (தீய தொடுதல்) என்பதைக்கூட பெற்றோர்கள் குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுக்கத் தவறிவிட்டார்கள். ஒருநாள் பள்ளிக்கூடத்தில், அமர்வு முடிந்தவுடன் 12 வயது மாணவி பிரியங்கா என்னிடம் வந்தாள், “அக்கா நான் சதீஸை லவ் பண்றேன்க்கா” என்றாள் அவள்.

ஏழாம் வகுப்பு படிக்கும் இவளுக்கு காதலா கேட்குது, என்று இதை படிப்பவர்களுக்கு நினைக்கத் தோன்றும்.

கோபப்பட்டு அந்த பெண்ணை அடிப்பதா? அவளைக் கண்காணிக்கச் சொல்வதா? அப்பா, அம்மாவிடம் சொல்வதா? என ஒரு நிமிடம் யோசித்துவிட்டு, பிரியங்காவை அழைத்தேன்.

"பிரியங்கா, அவனை முதல்ல எங்கம்மா பாத்த?

அவனைக் காதலிக்கணும்னு ஏன் உனக்குத் தோணுச்சு? என்று கேட்டதற்கு, "அக்கா ஒரு நாள் எனக்கு உடம்பு சரியில்லை. கிளாஸ்ல படுத்திருந்தேன், அப்ப P.E.T. பீரியட். அதனால எல்லாரும் கிரவுண்டுக்குப் போயிட்டாங்க. நான் மட்டும் தனியா படுத்திருந்தேன். அப்ப அந்த வழியா போன 10-வது படிக்கிற சதீஸ், உள்ளே வந்து என்னைத் தொட்டுப் பார்த்து, "என்னாச்சு உடம்பு சரியில்லையா?"-ன்னு கேட்டான். அந்தத் தொடுதல் எனக்குள்ள ஒரு மாற்றத்தை ஏற்படுத்துச்சு. அந்த ஆறுதலும் அரவணைப்பும் எனக்குத் தேவைப்பட்டது. அதுக்கப்பறம் நாங்க நல்ல ப்ரண்ட்ஸா இருந்தோம். ஆனா இப்பல்லாம் அவன் கூடவே இருக்கணும், அவன் கையைப் பிடிச்சுக்கிட்டே இருக்கணும்னு தோணுதுக்கா" என்றாள்.

அதைப்போல கல்லூரியில் இரண்டாமாண்டு படிக்கும் சமியை ஒரு பயிற்சியின்போது காண நேர்ந்தது. அவன் என்னிடம் வந்து, "அக்கா நானும் கீர்த்தியும் நல்ல ஃப்ரெண்ட்ஸ். ஒரு தடவை நான் ரொம்ப நேசிக்கிற எங்க மாமா இறந்துவிட்டார். அந்த விரக்தியில் நான் இருந்தப்ப கீர்த்தி என்கிட்ட வந்தா, "டேய்! சமி எப்பவும் ஜாலியா இருப்ப, இன்னைக்கு என்னடா டல்லா இருக்க?" எனக் கேட்டாள்.

நான் விவரத்தைக் கூறியவுடன் என் முதுகைத் தட்டிக் கொடுத்து ஆறுதல் கூறினாள். அவளின் அந்தத் தொடுதல் என்னை மிகவும் பாதித்தது. அவள் மீண்டும் மீண்டும் என்னைத் தொட வேண்டும், என்னுடனே இருக்கணும்னு தோணுச்சு. அதுக்காக இன்னொரு துக்கமான சம்பவம் நடக்காதான்னு நான் நினைச்சிருக்கேன். அவள் என்னை தொடணும்னு நான் பல நாள் ஏங்கியிருக்கேன். நல்ல ப்ரெண்ட்ஸா இருந்த எங்களுக்குள்ள எப்படி இப்படி ஒரு எண்ணம் வந்துச்சுன்னே தெரியலை. நாங்க ரெண்டு பேரும் இப்ப உயிருக்குயிரா காதலிக்கிறோம்" என்றான்.

வழக்கம்போல பயிற்சி முடிந்தவுடன் ஒரு கல்லூரி மாணவி, "அக்கா மனசு ரொம்ப பாரமா இருக்கு. நானும் என் கிளாஸ்மெட்டும் உண்மையாகவே நல்ல நண்பர்கள், எந்தத் தவறான எண்ணமும் எங்களுக்குள்ள கிடையாது. ஆனா, என்னோட ப்ரண்ட்ஸ் எல்லோரும் என்னைத் தவறான கண்ணோட்டத்திலேயே பார்க்குறாங்க.

ஒரு தடவை எங்க காலேஜ்லயிருந்து NSS கேம்ப் போயிருந்தப்ப நான் கீழே விழுந்துட்டேன். அப்ப எல்லோரும் அவங்கவங்க வேலையிலதான் கவனமா இருந்தாங்க. ஆனா, அவன் மட்டும் ஓடி வந்து என்னைத் தூக்கி, என்னோட காயத்துக்கு மருந்து போட்டு என்னை ரொம்ப அக்கறையோடு பாத்துக்கிட்டான். அதுவரை ஆண்களோட கைவிரல் கூட என் மேல் பட்டதுல்ல. அவன் தொட்டவுடன் எனக்குள்ள உடல்ரீதியாவும், மனரீதியாவும் ஏதோ ஒரு மாற்றத்தை உணர்ந்தேன். அந்தத் தொடுதல் எனக்கு வேணும்னு தோணுச்சு. அதுக்கப்பறம் நானும் அவனும் ரொம்ப நெருங்கிய நண்பர்களாக இருந்தோம். நான் அவனை ரொம்ப நேசிச்சேன். அவனோட இருக்குறப்ப என்னைய நானே புதுசா உணர்ந்தேன்.

என் பெற்றோர்கிட்ட கூடச் சொல்லமுடியாத எத்தனையோ விஷயங்களை நான் அவன்கிட்ட ஷேர் பண்ணியிருக்கேன். அவன் தோளுல சாஞ்சிருக்கேன். மனசு கஷ்டமா இருந்தா அவன் மடியில் படுத்து அழுதிருக்கேன். எங்களுக்குள்ள ஃப்ரண்ட்ஷிப்பைத் தவிர வேற எதுவும் இல்லை. ஆனா என்னோட ப்ரண்ட்ஸ் எல்லோரும் "ரெண்டு பேரும் லவ் பண்றீங்கதானே? எங்களுக்கு தெரியும்" என்று ஏதேதோ சொல்கிறார்கள். இதெல்லாம் என்னை வேற எண்ணத்திற்கு இட்டுச் செல்கிறது. எனக்கு என்ன பண்றதுன்னு தெரியலைக்கா" என்றாள்.

மேலே குறிப்பிட்ட ஒவ்வொரு சம்பவத்திலும் நட்புக்கு முன்பாக, காதலுக்கு முன்பாக 'தொடுதல்' ஒரு முக்கியப்

பங்கை வகிக்கிறது. மேல்தட்டுக் குடும்பங்களைச் சார்ந்த மாணவர்களுக்கு நாம் பேசுவதெல்லாம் ஒரு பிரச்சனையே கிடையாது. அவர்களின் பெற்றோர்கள், வேலை செய்வதாலும், சமூக அறிவு இருப்பதாலும் "அம்மா இது என் பாய் ப்ரண்ட்" என்று சொன்னாலோ, "அம்மா இது என் கேர்ள் ப்ரண்ட்" என்று சொன்னாலோ, தங்கள் குழந்தைகளை வழிநடத்த அவர்கள் தெரிந்திருக்கிறார்கள். ஆனால் பெரும்பான்மையான சாதாரண குடும்பத்தைச் சார்ந்த மாணவர்களின் வீட்டில் தம் நட்பைக் குறித்தோ, காதலைக் குறித்தோ பேசுவதற்குக் கூட மாணவர்கள் பயப்படுகிறார்கள்.

நாம் பொதுவாக பீச், பார்க், சினிமா தியேட்டர் என பல பொது இடங்களில் ஜோடி, ஜோடியாக காதலர்களைப் பார்த்திருக்கிறோம். எல்லா காதல் ஜோடிகளும் மிகவும் நெருக்கமாக அமர்ந்திருப்பார்கள்.

ஒரு நாள் மெரினா கடற்கரையில் லைட் ஹவுசில் இருந்து, எம்.ஜி.ஆர். சமாதி வரை நண்பர்களோடு நடந்து வந்து கொண்டிருந்தேன். அப்போது சுமார் 100 காதல் ஜோடிகளைப் பார்க்க நேர்ந்தது. எல்லோருமே பொதுவான சமூக விதியை மீறிக்கிட்டுதான் இருந்தாங்க.

சமூக விதின்னா என்னன்னு கேட்கிறீங்களா?

கட்டிப் பிடிக்கிறது, முத்தம் கொடுப்பது மற்றவர்களைக் கவரும் வகையில் நடந்துகொள்வது... இதெல்லாம்தான் சமூக விதியை மீறுவது. அவர்கள் எதுக்காக பொதுவிதியை மீறுகிறார்கள் என்று எப்போதாவது சிந்தித்திருக்கோமா? அந்தக் காதல் ஜோடிகளின் அருகாமையில் நின்றால் குற்றவாளியைப் பார்ப்பது போல நம்மைப் பார்க்கிறார்கள்.

அப்படி நானும் என் நண்பரும் ஓரிடத்தில் நின்று பேசிக்கொண்டிருந்தபோது, ஒரு காதல் ஜோடி, "வீட்ல தான் மகிழ்ச்சியா இருக்க முடியலன்னு இங்க வந்தா, இங்கேயும் தொந்தரவு பண்றாங்க" என்றார்கள்.

இதற்குக் காரணம் என்னவென்று நாம் ஆராய்ந்தால் அறிவைப் போதிக்கும் ஆரம்பப் பள்ளி முதல் ஆன்மாவைத் தேடும் கோயில்கள் வரை, எல்லா இடத்திலும் ஆண்கள் தனியாகவும் பெண்கள் தனியாகவும் பயணம் செய் கிறார்கள். எந்தப் பள்ளிக்கூடமும், கல்லூரியும் உடலில் ஏற்படும் உணர்வுகளை எப்படி கையாளுவது என்று சொல்லிக் கொடுக்கவில்லை. ஆனால் காதல் குறித்து பெற்றோர்கள் முதல் கல்வி நிறுவனங்கள் வரை எல்லோரும் கவலைப்படுகிறார்கள்.

காதலுக்கும், நட்புக்கும் ஒரு சிறு இடைவெளிதான்.

ஒரு பெண் சொன்னாள், "நானும், என் கல்லூரியில் படிக்கும் மாணவனும் நல்ல நண்பர்களாகத்தான் இருந்தோம். ஒரு நாள் எல்லோரும் விளையாடிக் கொண்டிருக்கும்போது, அவனது கை எதார்த்தமாக என் மார்பில் பட்டுவிட்டது. எனக்குள் முதன் முதலாக ஒரு மின்னல் பாய்ந்தது போல உணர்ந்தேன்; தலைசுற்றியது. அடுத்த கணம் என் பார்வை அவன் மீது வேறு விதமாக விழுந்தது. அதுவரை மனதில் எந்தச் சலனமுமே இல்லாமல் பழகிக் கொண்டிருந்த நாங்கள் தனிமையைத் தேட ஆரம்பித்தோம். அப்போதுதான் புரிந்தது அதுவரை நட்பாக இருந்த எங்கள் உறவு இந்த கணத்திலிருந்து காதலாக மாறிவிட்டது" என்று.

ஓர் ஆணும், பெண்ணும் இயல்பாகத்தான் பழகிக் கொண்டிருப்பார்கள்.

பொதுவாகச் சொல்வார்கள், "அவனெல்லாம் ஒரு மூஞ்சி அவன் என்னடி பர்சனாலிட்டியா இருக்கான். அவனைப் போயி காதலிக்கிறாயே" என்பதும்,

"என்னடா மச்சான் அதெல்லாம் ஒரு பிகராடா அதைப் போய் எப்படிடா லவ் பண்றே" என்று கேட்பதும் இன்றைக்கு வழக்கமான ஒன்றுதான்.

முதலில் ஆண் ஒரு பெண்ணை பார்த்தவுடன் அவளது உடல் கட்டமைப்பு, உடை, அழகு, என அவளின் தோற்றத்தால் ஈர்க்கப்படுகிறான்.

அதனால்தான் அவளைக் கண்ட அடுத்த நிமிடத்தி லிருந்து பைத்தியக்காரன்போல் மாறிவிடுகிறான். முதலில் நட்பாக ஆரம்பிக்கிறது அவர்களின் உறவு, நட்பை ஏற்றுக் கொள்ளாத சமூகத்தில் சாதாரணமாக அன்பைப் பகிர்ந்து கொள்வதற்குக் கூட அவர்கள் தனிமையைத் தேடவேண்டிய சூழல் ஏற்படுகிறது. அந்தத் தனிமை அவர்களை வேறு எண்ணத்திற்கு இட்டுச் செல்கிறது. தன் காதலனின் தொடுதலால் ஈர்க்கப்பட்ட அந்தப் பெண் அதுபோன்ற உணர்வுகளுக்கு அடிமையாகிறாள். உணர்வுகளுக்கு அடிமையாக்கப்பட்ட பெண் அடிக்கடி தனிமையில் சந்தித்துக் காதலிக்கிறாள்.

காதலிக்க ஆரம்பித்த இருவரும் இது எனக்கானது என்று தனக்குத்தானே சொந்தம் கொண்டாடுகிறார்கள். அதனால்தான் தன் காதலியை வேறு யாராவது பார்த்தால் கூட அவனுக்கு அவ்வளவு கோபம் வருகிறது. தன் காதலனை என்னிடமிருந்து யாராவது பிரித்து விடுவார்களோ என பயப்படும் காதலி, வேறு எந்தப் பெண்ணிடமும் அவளைப் பேச அனுமதிப்பதில்லை.

உணர்வுகளுக்கு அடிமையாகி, காதலைப் பகிர்ந்து கொண்டு தனக்கானது என்று சொந்தம் கொண்டாடி, இறுதியில் காதலே கசப்பானதாக மாறிய பல சம்பவங்களும் நமக்குத் தெரியும். அதனால்தான் உயிருக்குயிராய் காதலித்த காதலி, மனைவியாக வந்த பிறகு அவளே டார்ச்சராகி விடுகிறாள்.

ஆகவே, மாணவிகளே!

ஆண் நண்பர்களிடம் பழகும்போது மிகுந்த எச்சரிக்கையோடு பழக வேண்டும். எப்படி, ஓர் ஆண்

தொட்டவுடன் உன் உடலில் பாலியல் உணர்வு தூண்டப் படுகிறதோ, அதேபோல் அவனது உடம்பிலும், உன்னுடைய தொடுதல் பாலியல் உணர்வுகளைத் தூண்டிவிடும்.

ஒரு சில ஆண்கள், "டேய் மச்சான், அந்தப் பொண்ணை பார்த்த உடனே ஒரே மூடா இருக்குடா, எப்படியாச்சும் அவளை மடக்கிறணும்" என்று சொல்லி, உன்னைக் காதலிப்பது போல நடித்து, உன் உடம்பை மட்டும் அனுபவித்துவிட்டு தூக்கி எறிந்து விடுகிறார்கள்.

ஒரு சில ஆண்கள் தன் தோழிகளால் பாலியல் ரீதியாக ஈர்க்கப்படும்போது, "ச்சே" என்னடா இது. நம்ம ஃப்ரண்டப்போய் இப்படியெல்லாம் யோசிக்கத் தோணுதே, அப்படியெல்லாம் நினைக்கக் கூடாது. அவ நம்ம ஃப்ரண்ட், நாம இப்படி சிந்திச்சா எப்படி" என்று தன்னைத்தானே மாற்றித் தன் உணர்வுகளை அடக்கிக் கொள்கிறார்கள். இப்படியும் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள்.

ஆனால் எல்லோரும் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று சொல்வது நியாயமாகாது. ஆகவே ஒரு ஆணைப் பற்றியும், அவனது உணர்வுகளைப் பற்றியும் தெரிந்த நாம் அவனது உணர்வுகளை எந்த வகையிலும் தூண்டாத அளவிற்கு நடந்துகொள்ள வேண்டும். இதனால்தான் நமது பெற்றோர்கள், உடைகள் குறித்தும் நமது நடவடிக்கைகள் குறித்தும் நம்மிடம் கண்டிப்புடன் நடந்துகொள்கிறார்கள்.

எனவே பெண்ணாகிய நான் எந்த வகையிலும் ஓர் ஆணின் உணர்வைத் தூண்டும்படி நடந்துகொள்ள மாட்டேன் என ஒவ்வொருவரும் முடிவெடுக்க வேண்டும். அவர்களது உணர்வுகளைத் தூண்டாமல் நம்மை நாமே மிகுந்த கவனத்துடன் கையாள வேண்டும். உணர்வுகளைச் சரியாக கையாளத் தெரியாததால்தான் அனுதினமும், பத்திரிகைகளிலும், செய்திகளிலும் யோசிக்க முடியாத பல காரியங்கள் இன்றைக்கு நடந்துகொண்டிருக்கின்றன.

பொதுவாக, சமூகத்தில் நடக்கும் ஒவ்வொரு பிரச்சனைக்கான காரணத்தையும், அதற்கான தீர்வையும் காண வேண்டியது சமூகத்தின் கடமை. அதேபோல் ஒவ்வொரு தனிமனித வாழ்வில் ஏற்படும் பிரச்சனைக்கான காரணத்தையும் தீர்வையும் காண வேண்டியது ஒவ்வொருவரின் கடமையாகும். இன்று தனிநபர் வாழ்விலும், சமூகத்திலும் நிலவும் பெரிய பிரச்சனை காதல், செக்ஸ். இந்தப் பிரச்சனைக்கான காரணத்தைக் கண்டறியவும் தயங்குகிறார்கள். தீர்வு சொல்லவும் பயப்படுகிறார்கள்.

அதனால்தான் தினம் தினம் செய்திகளில் காதலிக்க மறுப்பதால் ஆசிட் வீசப்படுவதும், காதல் ஜோடிகள் பெற்றோருக்குப் பயந்து காவல் நிலையத்தில் தஞ்சம் என்றும், காதல் ஜோடிகள் தற்கொலை என்றும், கல்லூரிகளில் காதல் தோல்வியால் மனமுடைந்து காதலன், காதலி தற்கொலை என்றும், பள்ளிகளுக்குச் சென்றால், கெடுத்தவன் யார் என்றே தெரியாமல் கர்ப்பமாய் இருக்கும் மாணவிகள் என்றும், பல்வேறு பிரச்சனைகளை நம் சமூகத்தில் சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.



நான் பல பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் சென்றிருக்கிறேன். அங்கு 80 சதவிகித மாணவர்களின் கேள்வி ‘காதலிப்பது சரியா? தவறா?’ என்பதுதான். தவறு என்று சொன்னால், அதற்கு அவர்களின் பதில், “அப்பாடா வந்துட்டாங்கடா மூஞ்சியப்பாரு! இது ஒரு ஆளு பயிற்சி குடுக்க வருது பாரு!” என்று ‘நல்ல’தொரு சான்றிதழ் தருகிறார்கள். சில நேரங்களில் இவ்வார்த்தைகள் என் செவிகளிலேயேகூட ஒலித்திருக்கின்றன.

“இப்படி கெட்டுப்போய் வந்திருக்கையே, என்னத்தடி படிச்ச, உன் பள்ளிகூடத்தில, காலேஜ்ல என்னத்தடி சொல்லிக் குடுத்தாங்க”

அவமானம் தாங்கமுடியாமல் செத்துப்போன அப்பா அம்மா; தற்கொலை செய்துகொண்ட காதலர்கள்; குடும்பத்தாரால் ஒதுக்கிவைக்கப்பட்டவர்கள் என காதலித்தவர்களும், காதலித்தவர்களின் பெற்றோர்களும் குற்றவாளிகளாகவே கருதப்படுகிறார்கள்.

சிலர் சாதாரணமாகச் சொல்வார்கள், “தெரியுமாடி உனக்கு, அவ என்ன ஆட்டம் ஆடுனா, அவ புள்ள எவனையோ கூட்டிட்டு ஓடிட்டா” என்று. நம் சமூகத்தில் ஒருவர் மற்றவரை காதலித்தால் அது பெரிய தவறாகக் கருதப்படுகிறது. யாருமே செய்யாத ஒரு மாபெரும் குற்றத்தைக் காதலிப்பவர்கள் செய்துவிட்டதுபோல் ஒரு கற்பிதம் இங்கு கற்பிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் உண்மை என்னவென்றால் 90% மாணவர்கள் காதலிக்கிறார்கள்.

கலாச்சாரம் என்ற போர்வையில் ஒவ்வொருவரின் நியாயமான உணர்வுகள் கூட இங்கு நியாயமாகப் பேசப்படுவதில்லை; விவாதிக்கப்படுவதில்லை.

கல்வி என்பது அறிவைப் பெற்றுக்கொள்வதற்காகவும், நன்மை தீமைகளைத் தெரிந்துகொள்வதற்கும், உண்மை என்ன? பொய் என்ன? என்று ஆராய்ந்து, புரிந்துகொண்டு நல்ல பாதையில் சென்று ஒவ்வொரு மனிதனும் வாழ பயன்படவேண்டும். ஆனால், இன்றைய கல்வி முறை மனித மதிப்பிற்கும் உணர்வுக்கும் முக்கியத்துவம் கொடுக்காமல், மதிப்பெண்களுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கிறது.

அதனால்தான் படிப்பதற்கு லட்சக் கணக்கான புத்தகங்கள் இருந்தாலும், இன்றைய மாணவர்கள் காதல் அல்லது செக்ஸ் புத்தகம் என்றால் அதிக ஆர்வத்தோடு படிக்கிறார்கள். கேட்பதற்கு எத்தனையோ பாடல்கள் இருந்தாலும் காதல் பாடல்கள்தான் அவர்கள் காதில் தேனாய் பாயும். பார்ப்பதற்கு நிறைய நல்ல படங்கள் இருந்தாலும் காதல் காட்சி இல்லாத சினிமா ஓடவே ஓடாது என்ற நிலை. உணர்வோடும், உயிரோடும் கலந்த காதலர்களை பீச், பார்க், சினிமா தியேட்டர் என எல்லா பொது இடங்களிலும் பார்க்க முடிகிறது.

சிறு குழந்தைகளிடம் எதை செய்யக் கூடாது என்று சொல்கிறோமோ அதையே அவர்கள் செய்வார்கள். எந்த ஒரு செயலைக் குறித்தும் நமக்கு ஒரு ஆழமான தெளிந்த புரிதல், இருக்க வேண்டும்.

இந்த மண்ணில் வாழும் ஒவ்வொரு மனிதனும் அவன் பெற்றுக்கொண்ட கருத்தின் அல்லது தகவலின் அடிப்படையில் தான் வாழ்கிறான். (Information rules a man...) தகவல்கள், வெவ்வேறு தளங்களிலிருந்து மனித மூளைக்குச் செல்கின்றன. மூளையில் தகவல்கள் பல விதமாகப் பதிவாகிறது. படிப்பது, கேட்பது, பார்ப்பது,

உணர்வது என அவர்கள் தெரிந்துகொண்ட தகவல்களே ஒவ்வொரு ஆணையும் பெண்ணையும் அவரவர் பாதைக்கு அழைத்துச் செல்கிறது. கண்ணால் பார்ப்பதும், உடலால் உணர்வதும் மிக வேகமாக மூளையில் பதிவாகி, எண்ணங்களாக மாறி, செயல்பாட்டில் ஈடுபடுகிறது.

இயற்கையாகாவே ஓர் ஆண் பெண்ணால் ஈர்க்கப்படு கிறான். பெண், ஆணால் ஈர்க்கப்படுகிறாள். (Opposite sex attract each other.) ஈர்க்கப்படுவது என்பது முற்றிலும் இயற்கையானது. மனித உடலில் ஏற்படும் ஹார்மோன்களின் மாற்றம் தான் ஒரு பெண், ஆணைப் பார்த்தவுடன் ஈர்க்கப்படுவதற்கும், ஓர் ஆண் பெண்ணைப் பார்த்தவுடன் ஈர்க்கப்படுவதற்கும் காரணம். இதை இயற்கையானது என்று உணர்ந்து ஒவ்வொரு பெற்றோரும், பள்ளியும் வளரிளம் குழந்தைகளுக்குத் தொடுதலைக் குறித்தும், நட்பைக் குறித்தும், காதல் உணர்வைக் குறித்தும் விளக்கியிருந்தால், இன்று காதலைப் பற்றிப் பேச யாரும் அச்சப்படமாட்டார்கள்.

ஒரு பிரபலமான தனியார் கல்லூரியில் இறுதியாண்டு படிக்கும் தேவா. ஒரு பெண்ணை காதலித்தான். அந்த பெண்ணிடம் அதை தெரிவித்தும் விட்டான். ஆனால் அதை ஏற்றுக்கொள்ள அந்தப் பெண் மறுத்துவிட்டாள். பலமுறை அவளிடம் அதைத் தெரிவித்தும் அவள் அதை ஏற்க மறுத்துவிட்டாள். இறுதியாக ஒரு முடிவுக்கு வந்த தேவா அவளிடம் கூறுகிறான்: "நான் இன்னைக்கு நைட் உனக்கு 100 மெசேஜ் பண்ணுவேன். 101வது மெசேஜுக்கு நீ ரிப்ளை பண்ணலைன்னா நான் செத்துப் போயிடுவேன்".

கடைசி வரை அவள் ரிப்ளையும் பண்ணவில்லை. இதனால் மனமுடைந்த தேவா மறுநாள் உடல்நிலை சரியில்லை என்று நண்பர்களிடம் சொல்லிவிட்டு, விடுதி அறையிலே இருந்து விட்டான். காதல் தோல்வியால் மிகுந்த வேதனைக்குள்ளான தேவா விடுதி அறையிலேயே தூக்குப் போட்டு தற்கொலைக் செய்துகொண்டான்.

கல்லூரியில் படிக்கும் இளங்கோவுக்கும், பள்ளியில் படிக்கும் ரேவதிக்கும் காதல் மலர்கிறது. இளங்கோ ஒரு பணக்காரக் குடும்பத்தைச் சார்ந்தவன். ஜாதியிலும் உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவன். ஆனால் ரேவதியோ ஏழைக் குடும்பத்தில் பிறந்தவள். தாழ்ந்த ஜாதியைச் சேர்ந்தவள். இருவரும் ஒருவரை ஒருவர் மிகவும் நேசிக்கின்றனர். ரேவதியோ பள்ளியில் வகுப்பை கட் அடித்து விட்டு, அவனுடன் பீச், பார்க், சினிமா என ஊர் சுற்றுகிறாள்.

இந்த விஷயம் ஒரு நாள் ரேவதியின் பெற்றோருக்குத் தெரிய வருகிறது. ரேவதியின் பெற்றோரோ, "அடிப்பாவி என்ன காரியம் செஞ்சுட்ட, நம்ம குடும்ப சூழ்நிலையை தெரிஞ்சும், இப்படியெல்லாம் பண்ண உனக்கு எப்படி மனசு வந்தது" என்று அவளை அடித்து, அவளது படிப்பை நிறுத்தி விடுகின்றனர். அவளுக்கு மாப்பிள்ளையும் தேடுகின்றனர்.

இதை அறிந்த இளங்கோ, ரேவதியை யாருக்கும் தெரியாமல் தன் வீட்டிற்கு அழைத்து வருகிறான். இளங்கோவின் பெற்றோரும், "ஏன்டா, ஒரு தாழ்ந்த ஜாதிப் பொண்ணைப் போய் இப்படி இழுத்திட்டு வந்திருக்கியே உனக்கு அறிவில்லையா? நீ விரும்பியதெல்லாம் உனக்கு வாங்கித் தந்தோமே, இப்படி எங்களக் கேவலப்படுத் திட்டியே. தயவுசெஞ்சு எங்கயாவது போயிரு. எங்க பையன் செத்துட்டான்னு நினைச்சுக்கிறோம்" என்று கூறி விடுகின்றனர். வேறு வழியில்லாமல் சென்னைக்கு வந்து வடபழனி கோயிலில் திருமணம் செய்து கொள்கிறார்கள்.

திருமணம் ஆனதே தவிர உணவுக்கும், இருப்பிடத் திற்கும் மிகுந்த கஷ்டப்பட்டனர். இளங்கோ, தனக்குத் தெரிந்த நண்பர்களிடமும், உறவினர்களிடமும் உதவி கேட்கிறான். ஆனால், யாரும் பணம் கொடுத்து உதவ முன்வரவில்லை. ஏதேதோ காரணங்களைக் கூறி மழுப்பிவிட்டனர்.

என்ன செய்வதென்று தெரியாமல் கோயம்பேடு மார்க்கெட்டில் மூட்டை தூக்குகிறான் இளங்கோ. அவனால் முடியவில்லை, அவனது வாழ்க்கை முறையும் அப்படி யில்லை. வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பதால் அவனுக்கு இது பழக்கப்படவில்லை. தங்க இடமும் இல்லை, உணவும் இல்லை எனவே மனமுடைந்த இளங்கோவும், ரேவதியும் தற்கொலை செய்துகொள் கிறார்கள்.

திண்டுக்கல்லைச் சேர்ந்த ஒரு பாலியல் தொழிலாளியின் மகள் ப்ரியா I.A.S கோச்சிங் சென்று கொண்டிருந்தாள். அவளை அந்த ஊரே பல கோணங்களில் தவறான கண்ணோட்டத்துடன் பார்த்தது. அவள் போகும் போதும், வரும் போதும் அவளைத் தவறாகப் பேசியது. ஆனால் நம்பிக்கையுடன் இருந்த ப்ரியா தன் படிப்பிலேயே கவனமாக இருந்தாள். எதற்காகவும் தனது இலட்சியத்தை தனது I.A.S கனவை விட்டுவிடக் கூடாது என்று தன்னம்பிக்கையுடன் படித்து வந்தாள்.

ஒரு நாள் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த சிவா தனது நண்பர்களுடன் பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தான். அந்த வழியே சென்ற பிரியாவைப் பார்த்து அவளது தாயின் தொழிலைப் பற்றி விமர்சித்து தகாத வார்த்தைகளால் பேசினர். ஆனால் அதையெல்லாம் பொறுத்துக்கொண்ட பிரியா, அவர்களிடம், "மன்னிச்சிருங்க, நீங்க நினைக்கிற மாதிரி பொண்ணு நான் இல்லைங்க. எங்கம்மா ஏதோ சூழ்நிலை காரணமா அந்தத் தொழில் செய்றாங்க. ஆனா, நான் எந்த ஒரு நிலையிலையும் அந்த மாதிரி ஒரு முடிவு எடுக்க மாட்டேன். என்னோட இலட்சியம் நான் I.A.S ஆக வேண்டும் என்பதுதான். அதுல மட்டும்தான் என்னுடைய கவனம் இருக்கும்" என்றாள்.

சிவா சற்று அதிர்ந்து போனான். பிரியாவின் பணிவும், தெளிவும், தன்னம்பிக்கையும் அவனை ஏதோ

செய்துவிட்டது. அந்த நொடியிலிருந்து அவளிடம் நட்பு கொள்கிறான். இருவரும் நல்ல நண்பர்களாக இருக்கிறார்கள், ஒருவருக்கொருவர் உதவியாய், அன்பாய், ஆறுதலாய் இருந்து உயர்ந்த நிலையை அடைகின்றனர். நட்பு காதலாய் மாறுகிறது. இருவரும் திருமணம் செய்துகொள்கின்றனர்.

தற்போது பிரியாவும், சிவாவும் அரசுப் பணியில் வேலை செய்கின்றனர். அன்பான குடும்பம், அழகான குழந்தை என்று மகிழ்ச்சியாகச் செல்கிறது அவர்களது வாழ்க்கை.

பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்தவன் குமார். ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவன். அவனுக்கு இரண்டு தங்கைகள், குடும்பச் சூழ்நிலை காரணமாக இருவருமே +2வுக்கு மேல் படிக்கவில்லை. திருப்பூரில் உள்ள ஒரு பனியன் கம்பெனியில் வேலை செய்து வந்தனர். அந்தச் சமயத்தில் குமார் வழக்கறிஞர் ஆகவேண்டும் என்ற நோக்கில் படித்துக் கொண்டிருந்தான். குமாரின் தங்கைகள், தாங்கள் தங்கியிருக்கும் விடுதியில் உள்ள தோழிகளிடம் தன் அண்ணனைப் பற்றி எப்போதும் பேசிக்கொண்டேயிருப் பார்கள். அவர்கள் எப்போதும் இப்படி பேசிக்கொண்டிருப் பதைப் பார்த்து அந்த முகம் தெரியாத குமாரின் மீது அவர்களது தோழி கவிதாவிற்கு ஒர் ஈர்ப்பு ஏற்படுகிறது.

பொங்கல் விடுமுறைக்கு அனைவரும் வீட்டிற்குச் செல்ல முடிவெடுக்கின்றனர். அப்போது கவிதா தன் தோழிகளிடம் தன்னையும் அவர்களது வீட்டிற்கு அழைத்துப்போகும்படி கூறினாள். சரி என்று அவர்களும் கவிதாவைப் பெரம்பலூருக்கு அழைத்துச் சென்றனர். அங்கே குமாரின் நடவடிக்கைகளையும், அவனது குடும்பத்தின் மீது அவன் செலுத்தும் அக்கறையையும், அன்பையும் பார்த்த கவிதா குமாரிடம் நேராக சென்று, தான் அவரைக் காதலிப்ப தாகவும், அவரை திருமணம் செய்துகொள்ள விரும்புவ தாகவும் தெரிவிக்கிறாள்.

குமாரும், "நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக் கிறேன். ஆனா நான் என் குடும்பத்துக்கு நிறைய செய்யணும். நீ வெய்ட் பண்றியா"- என்று கேட்டான். அவளும் சம்மதிக்கிறாள். இருவரும் காதலிக்கிறார்கள். ஒரு சமயத்தில் குமார் கவிதாவிடம் அவளது +2 மார்க் பற்றி கேட்கிறான்.

அவள், "918 மார்க் எடுத்தேன் பொறியியல் படிக்கணும்னு ரொம்ப ஆசை. ஆனால் குடும்ப சூழ்நிலை காரணமாக படிக்க முடியலை" என்றாள். தனக்குத் தெரிந்த நபர்களிடம் உதவி கேட்டு கவிதாவைப் பொறியியல் படிக்க வைக்கிறான் குமார். இதை அறிந்த இருவரின் பெற்றோரும் அவர்களது திருமணத்திற்குச் சம்மதம் தெரிவிக்கின்றனர்.

தனது வழக்கறிஞர் படிப்பை முடித்த குமார், கவிதாவைத் திருமணம் செய்துகொள்கிறான். இப்போது வழக்கறிஞராக பணியாற்றிவரும் குமார், தன் மனைவியின் படிப்பு கெட்டு விடக்கூடாது என்பதற்காக, அவளை விடுதியில் தங்க வைத்துப் படிக்க வைக்கிறான். குடும்பத்தையும், பொருளாதார முறையில் நல்ல நிலைக்குக் கொண்டுவந்து விட்டான். ஒரு தங்கைக்கு நல்ல முறையில் திருமணமும் செய்து முடித்து விட்டான். மகிழ்ச்சியாகத் தொடர்கிறது அவர்களது திருமண வாழ்க்கை.


காதல் என்பது ஓர் உணர்வு. எல்லோருக்குள்ளும் நான் தனியாக இருக்கிறேன், எனக்கென்று யாருமில்லை, என் மீது அக்கறை செலுத்த, அன்பு வைக்க, என்னை நேசிக்க யாரும் இல்லை என்ற தனிமையை எல்லா மாணவர்களும் உணர்கிறார்கள். பெற்றோருக்குக் குழந்தைகளோடு நேரம் செலவு செய்ய முடியவில்லை.

அதனால் தான் ஒரு மாணவியிடம், "என்ன காரணம் அவனைக் காதலிக்கிறாய்?" என்று கேட்டால், அவள் சொல்லுவாள், "அவன் ரொம்ப நல்லவன், என்னை ரொம்ப நேசிக்கிறான். யாருமே என்னை இந்த அளவிற்கு நேசித்தது

இல்லை. என் மீது அக்கறை காட்டினது கிடையாது" என்று. மாணவர்களிடம் கேட்டாலும் இதைத் தான் சொல்வார்கள்.

"அவ ரொம்ப நல்ல பொண்ணு. எனக்கு அவள ரொம்பப் பிடிக்கும்" என்று. ஆக தனிமை அரவணைப்பையும், அன்பையும், நட்பையும் தேடுகிறது. அது காதலாக மாறுகிறது. அது எந்த மாதிரியான காதல் என்பதுதான் முக்கியம்.

இங்கு காதல், குமார் - கவிதா, பிரியா - சிவா இவர்களை உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்கிறது. அதே காதல் இளங்கோ - ரேவதி-யின் உயிரைக் குடித்து விடுகிறது. நீங்கள் எந்த மாதிரி காதலர்கள் என்பதை நீங்களே உணர்ந்து காதலிப்பது சரியா? காதலிப்பது தவறா? என்று முடிவெடுத்துக் கொள்ளுங்கள்.



ஓர் ஆணும் பெண்ணும்
நல்ல நண்பர்களாக இருக்க முடியுமா?

உயிர் காப்பான் தோழன் என்று சொல்வார்கள். நண்பர்கள் நமது செல்வம். அதிலும், குறிப்பாக, நல்ல நண்பர்கள் நமது சொத்து.

"உன் குற்றங்களைச் சுட்டிக்காட்டிக் கண்டிக்கிற நண்பனைக் கண்டால், அவரை, செல்வப் புதையல் இருக்கும் இடத்தைச் சுட்டிக் காட்டுகிறவர் எனக்கருதி, அவரோடு நட்புக் கொண்டு பழகவேண்டும்" -புத்தர்.

சில வீடுகளில் அம்மா சொல்வார்கள், "நல்லாதாம்மா இருந்தா ஏதோ கெட்ட பிள்ளைகளோட சேர்ந்து வீணாயிட்டா" என்று, "நல்லா படிச்சிக்கிட்டுதான் இருந்தான், என் பையன் கூடாதவன்கூட கூடி வாழ்க்கையைத் தொலைச்சிட்டானே" என்று வருத்தப்படுவார்கள்.

ஒவ்வொருவரின் வாழ்விலும் நண்பர்கள் மிக முக்கியப் பங்கு வகிக்கிறார்கள். சில சமயங்களில் நண்பர்கள் இல்லாத வாழ்க்கையை நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. உண்மையிலேயே நல்ல நண்பர்கள் கிடைப்பது வரம்தான்.

எனக்கு ஒரு பையனத் தெரியும். அவன் பெயர் ராஜா. அவன் ஒரு கல்லூரியில படிக்கிறான். அவனை செல்வி என்பவள் காதலிக்கிறாள். ஆனால் ராஜா செல்வியிடம், நான் உன்னை என்னுடைய நல்ல ஃப்ரண்டாகத்தான் பார்க்க முடியும், பழக முடியும். என்னால் உன்னைக் காதலியாக ஏற்றுக்கொள்ள முடியாது என்று மறுத்துவிடுகிறான். 7 வருடத்திற்குப் பிறகு ஒரு நாள் செல்வி, ராஜாவைப் பார்க்க வருகிறாள்.

“என்னமா நல்லாயிருக்கியா? சாரி, என்னால உன் கல்யாணத்துக்கு வரமுடியல. உன் கணவர் நல்லா யிருக்கிறாரா?” என்று விசாரித்துக்கொண்டிருக்கும் போதே செல்வியின் கண்களிலிருந்து கண்ணீர், தாரை தாரையாக வழிகிறது.

ஒன்றும்புரியாமல் ராஜா, “ஏன் அழுகிறாய் செல்வி” என்று கேட்க “என் கணவர் ஒரு விபத்தில் இறந்துவிட்டார், பெற்றோர்களும் இல்லை நான் எங்கு போவது என்று தெரியவில்லை. உன்னால் தான் என் வாழ்வு இப்படி ஆனது, நீ என்னை திருமணம் செய்திருந்தால் என் வாழ்வு இப்படிப் பாழாய்ப் போயிருக்குமா? உன்னோடு தான் என் வாழ்வு என்று சொல்லி அவன் கையைப் பிடித்துகொண்டு என்னை உன் வீட்டிற்குக் கூட்டிகிட்டு போ” என்று சொன்னாள்.

அமைதியாக அவன் பதில் சொல்கிறான்,

“செல்வி தயவுசெய்து கோபப்படாதே. அன்றைக்கும் நீ என்னுடைய ஃப்ரண்டுதான், இன்றைக்கும் நீ என்னுடைய ப்ரண்டுதான். என்னால் உன்னை கல்யாணம் பண்ண முடியாது. என் அம்மா எனக்கு ஒரு பொண்ணைப் பார்த்து வைச்சிருக்கிறாங்க. அதனால, என்னால் என் அம்மாவை ஏமாற்ற முடியாது. உனக்கு என்ன உதவி வேண்டு மானாலும் என்னிடம் தயங்காமல் கேள்” என்றவன், செல்வியை பாதுகாப்பாக பெண்கள் விடுதியில் விட்டுவிட்டு, அவன் வீட்டிற்குச் சென்றான்.

இரண்டு நாட்கள் கழித்து விடுதியிலிருந்து, “சார் செல்வி விஷம் குடிச்சிட்டா” என்று போன் வந்தது. பதறி அடித்து விடுதிக்குப் போய், “ஏன் செல்வி இப்படி செய்திட்ட” என்று அழுதுகொண்டே மருத்துவமனையில் சேர்த்து விடுகிறான் ராஜா. தன் வாழ்க்கை இப்படி ஆகிவிட்டதே என்று நினைத்து மனநோயாளி ஆகிவிடுகிறாள். ஆறு மாதம் செல்வியைச் சென்னையிலுள்ள ஒரு தனியார்

மருத்துவமனையில் சேர்த்துவிட்டு ராஜாவே அனைத்தையும் பார்த்துக்கொள்கிறான். சிகிச்சை அளித்த டாக்டர் ராஜாவை கண்காணித்து, அவனின் நட்பைப் பாராட்டி, செல்வியை அந்த டாக்டரே திருமணம் செய்து கொள்கிறார். ராஜாவும் தன் அத்தை மகளை திருமணம் செய்து கொண்டார். தற்போது இரண்டு குழந்தைகள் உள்ளனர்.

வக்கிரம் நிறைந்த இந்தச் சமூகத்தில் ராஜாவின் மனதில் எந்த ஒரு தவறான எண்ணமும் இல்லை. கடைசிவரை செல்வியை மதித்து அவளுக்கு ஒரு புது வாழ்வை ஏற்படுத்திக் கொடுத்த ராஜாவை வணங்கத்தான் வேண்டும்.

ஒரே பள்ளியைச் சார்ந்த 6 மாணவர்கள், 4 மாணவிகள் நல்ல நண்பர்கள். பள்ளிப் படிப்பு முடிந்து 8 பேர் ஒரே கல்லூரியில் சேர்கிறார்கள், 2 பேர் வேறு கல்லூரிக்குச் சென்று விடுகிறார்கள். எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் யாராவது ஒருவர் வீட்டில் 10 பேரும் சந்திப்பது வழக்கம். எல்லா பெற்றோருக்கும் தெரியும் அவர்கள் நெருங்கிய நண்பர்கள் என்று. ஒன்றாக உண்பதும், உறங்கியும் பழகக் கூடியவர்கள். எல்லோருக்கும் திருமணம் முடிந்துவிட்டது. இன்றுவரை நேரம் கிடைக்கும் போதெல்லாம் குடும்பத்தோடு சந்தித்து கொள்ளுவார்கள். இவர்களைப் போல இன்றும் எத்தனையோ ஆண்களும், பெண்களும் நண்பர்களாகவே வாழ்கிறார்கள்.

நீ பள்ளிக்கோ, கல்லூரிக்கோ போகும்போது பசங்க கிண்டல் செய்வது இயல்பான ஒன்று. ஆனால் உன் தோழி சொல்வாள், "ஏய் அவன் உன்னைத்தான்டி பார்த்திட்டே போறான்..." என்று ஆரம்பித்து, ஒரு நாள், "அவன் நீ இல்லனா செத்துடுவாண்டி" என்று சொல்லி, கடைசியில் நீ அவன் பின்னாடி போறதுக்கு உன் ஃப்ரண்ட்தான் காரணமாயிருப்பா. இறுதியில உன் தோழி பாஸ் பண்ணிடுவா, நல்லா படிச்சிக்கிட்டுயிருந்த நீ தோற்றுப் போயிடுவ. எனவே நண்பர்களைத் தேர்வு செய்வதில் மிக மிக கவனம் தேவை.



நான் பழகும் ஆண் நல்லவரா, கெட்டவரா?

“அறிவு ஒன்றுதான் அச்சத்தை முறிக்கும் அரிய மருந்து. அறிவை வளர்த்துக்கொண்டால் எல்லாவிதமான பயங்களும் அகன்றுவிடும்” - எமர்சன்

மனிதனை ஒரு அளவுகோல் வைத்து இவர் நல்லவர், இவர் கெட்டவர் என்று யாரும் தீர்மானிக்க முடியாது. உனக்கு கெட்டவனாகத் தெரிபவன், எனக்கு நல்லவனாகத் தெரியலாம், உனக்கு நல்லவனாகத் தெரிபவன் எனக்குக் கெட்டவனாகத் தெரியலாம். எனினும், ஆய்வின் அடிப்படையில் பிறக்கும்போது ஒவ்வொரு மனிதனும் நல்லவனாகவே பிறக்கிறான். சந்தர்ப்ப சூழ்நிலைகள் ஒவ்வொரு மனிதனையும் உருவாக்குகிறது. ஆக, நீ ஒருவரோடு பழகும்போது அவன் பெற்றுக் கொண்ட கருத்தியல் அடிப்படையில்தான் உன்னுடன் பழகுவான். ஒவ்வொரு மனிதனிடமும் 2 குணங்கள் உள்ளன.

அவன் கருத்தரித்த நேரம்... அதாவது, தன் தாய் வயிற்றில் இருக்கும்போது அவன் தாய் அனுபவித்த வலிகள், வேதனைகள் மற்றும் மகிழ்ச்சி எதுவானாலும் அது அந்தக் குழந்தையின் ஒரு குணத்தைத் தீர்மானிக்கிறது.

அவன் வளர்ந்து விவரம் தெரிந்த பிறகு அவன் சார்ந்த உறவினர்கள், நண்பர்கள், சூழல் இவையனைத்தும் இன்னொரு குணத்தைத் தீர்மானிக்கின்றன. ஒருவன் பெற்றுக் கொண்ட கருத்தியல் அடிப்படையில்தான் அவன் வாழ்வான்.

பெண் ஒரு போதைப் பொருள் என்று நினைத்திருந்தால், நீ எவ்வளவு அன்பாகப் பேசினாலும், உண்மையாக இருந்தாலும் அவன் உன்னை போதைப் பொருளாக மட்டுமே பார்ப்பான். உன்னை பாலியலுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று நினைப்பான். ஒரு வருடம் உன் பின்னாலேயே வந்து, "செல்லம் I Love You நீ இல்லைன்னா நான் செத்துவிடுவேன்... நீதான் என் உயிர், என் மூச்சு... உனக்காக என் உயிரையே கொடுப்பேன்... வாழ்நாள் முழுவதும் உன்னை பார்த்துப்பேன்... உன்னை மட்டும்தான் காதலிக்கிறேன்....." என்று அன்பு வார்த்தைகளைப் பேசி, மனதைக் கெடுத்து, "ப்ளீஸ்டி, நீ எனக்கு வேணும், என்னை நம்பு, நான் உன்னை ஏமாத்தமாட்டேன்" என்று சொல்லி உன் உடம்பை அனுபவித்துவிட்டு, "போடி உன்னமாதிரி ஆயிரம் பேர்" என்று உன்னைத் தூக்கி ஏறியும் ஆண்களும் உண்டு.

நந்தினி 12ஆம் வகுப்பு படிக்கும் மாணவி. அவளும் அவளது தோழியும் பள்ளிக்கு நடந்து செல்வது வழக்கம். அன்றைக்கும் தன் தோழியுடன் நந்தினி பள்ளிக்கு நடந்து சென்று கொண்டிருந்தாள். அப்போது அவளது தோழி, "ஏய் நந்தினி அங்க பாரேன். அந்த பஸ் ஸ்டாப்-ல நிக்கிற பையன் உன்னையே பாக்குறான்" என்கிறாள்.

"ஏய் சும்மா இருடி, யார் நம்மளப் பாத்தா நமக்கென்ன அமைதியா வா கிளாஸ்க்கு நேரமாயிருச்சு" என்று வேகமாகச் சென்றுவிடுகிறாள்.

மறுநாளும் வழக்கம்போல தன் தோழியுடன் பள்ளிக்குச் செல்லும்போது, அதேபோல் கூறுகிறாள் தோழி. சட்டென்று பஸ் ஸ்டாப்பைப் பார்க்கிறாள் நந்தினி. அங்கே சுரேஷ் நின்று கொண்டிருந்தான். அவளைப் பார்த்துச் சிரித்தான். சட்டென்று முகத்தை திருப்பிக் கொண்டாள் நந்தினி. நந்தினியின் தோழி அவளைக் கிண்டல் செய்கிறாள்.

“பார்த்தியா நேத்தே சொன்னேன்ல, அவன் உன்னைத் தாண்டி பாக்குறான். உன்னைப் பாத்த உடனே சிரிச்சான் பாத்தியா” என்கிறாள்.

அமைதியாக இருக்கிறாள் நந்தினி. அவளுக்குள்ளும் காதல் உணர்வு எட்டிப்பார்க்கிறது. சுரேஷ் பணக்கார வீட்டுப் பையன், மேலும் சேரக்கூடாத நண்பர்களோடு சேர்ந்து சைட், தண்ணி, தம் என்று எல்லா கெட்ட பழக்கங்களும் உடையவன். அவனைப் பற்றி முழுமையாகத் தெரியாத நந்தினி அவனிடம் மனதைப் பறிகொடுக்கிறாள். இருவரும் காதலிக்கிறார்கள். ஒரு நாள் சுரேஷ் நந்தினியிடம், “நாளைக்கு நீ ஸ்கூலுக்கு போறேன்னு சொல்லி கிளம்பிவிட்டு பஸ் ஸ்டாப்-ல வெய்ட் பண்ணு நான் உன்னை என் ப்ரண்ட் வீட்டுக்குக் கூட்டிட்டு போறேன். நான் உன்கிட்ட நிறைய பேசணும்” என்கிறான்.

நந்தினியும் மறுநாள் காலை பஸ் ஸ்டாப்பில் காத்திருக்கிறாள். பைக்கில் வந்த சுரேஷ் அவளை ஏற்றிக் கொண்டு தனது நண்பனின் வீட்டிற்கு அழைத்துச் செல்கிறான். அங்கே அவளுடன் உறவு வைத்துக்கொள்ள முயல்கிறான். அவள் மறுக்கிறாள்.

“என்மேல உனக்கு நம்பிக்கை இல்லையா, நான் உன்னதாண்டி லவ் பண்றேன், உன்னைத் தான் கல்யாணம் பண்ணுவேன். பிளீஸ், என்னை நம்பு நான் உன்ன ஏமாத்தமாட்டேன்” என்று கூறி அவளைச் சம்மதிக்க வைத்து அவளுடன் உறவுகொள்கிறான்.

சில நாட்களுக்குப் பிறகு நந்தினியின் தோழி அவளிடம், “ஏய்! நந்தினி உனக்கு ஒன்னு தெரியுமா, சுரேஷ்க்கு அடுத்த மாசம் கல்யாணமாம்” என்கிறாள். அதிர்ந்து போன நந்தினி சுரேஷிடம் ஓடுகிறாள்.

அவனிடம், “டேய் சுரேஷ் உனக்கு கல்யாணமா? என்று கேட்க, “ஆமா” என்கிறான் திமிராக.

“டேய், அப்ப ஏண்டா என் வாழ்க்கையைக் கெடுத்த? என்று கேட்கிறாள். “ஏய் நான் கையை தட்டுனா நூறு பேர் ஓடிவருவாங்கடி. நீயெல்லாம் என் கால் தூசிக்குக் கூட வரமாட்ட” என்று கூறிவிட்டு வேகமாகச் சென்று விடுகிறான்.

இதையெல்லாம் கவனித்த சுரேஷின் நண்பன், அழுது கொண்டு செல்லும் நந்தினியைப் பார்த்து, “உன்கிட்ட ஒரு முக்கியமான படத்தைக் காட்டணும்”, என்று சொல்லி தன் மொபைல் போனை எடுக்கிறான். அதில் நந்தினியும் சுரேஷும் நெருக்கமாக இருந்த காட்சிகள் இருந்தன. அதிர்ச்சி யடைந்தாள் நந்தினி.

“கவலைப்படாத, சுரேஷ் இல்லைன்னா என்ன என் கூட வா. அப்படி என் கூட நீ வரலைன்னா இதை நெட்ல போட்டு உன்னைக் கேவலப்படுத்திடுவேன்” என்று கேவலமாகப் பேசினான். காதலித்தவனும் ஏமாற்றிவிட்டான். அவனது நண்பனும் தொல்லை கொடுக்கிறான், வாழ்க்கையும் போய் விட்டது என்ற விரக்தியில் மன நோயாளி ஆகிவிடுகிறாள் நந்தினி.

நானும், என் உயிருக்கு உயிரான காதலனும் மட்டும்தான் இந்த இடத்தில் இருக்கிறோம் என்று நம்பி, அவன் மீது வைத்த நம்பிக்கையில் அவனோடு பகிந்துகொள்ளும் உன் அந்தரங்கங்களை, உனக்கே தெரியாமல் அவனுடைய செல்போனிலும், பேனா கேமராவிலும், பதிவுசெய்து, தன் நண்பர்களிடம் தான் பெரியதாக சாதித்துவிட்டதாக பெருமையடித்துக்கொள்ளும் வக்கிரபுத்தியுள்ளவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

கல்லூரியிலோ, பள்ளியிலோ படிக்கும் ஒவ்வொரு மாணவியும் சும்மா ஏதோ கடமைக்குப் படிக்கிறேன் என்று இருக்க வாய்ப்பில்லை. எல்லோர்க்குள்ளும் ஆழமான ஆசை இருக்கும். நானும் மற்றவர்களைப் போலப் படித்து பெரியாளாகி என் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும்

என்று. படிக்கும் இடத்தில் நட்பு ஏற்படும் போதோ, காதல் ஏற்படும் போதோ அந்த நிமிடம் உன்னை நீ யோசிக்க மறந்துவிடுகிறாய். காதல் உணர்வு உன் மனதில் ஆட்கொண்ட பிறகு நீ ஒன்றுமே செய்ய முடியாது. காதல், பாசம், அன்பு, உணர்வு சம்மந்தப்பட்டவை. உன் ஆண் நண்பர்களோடு பழகும் போது உன்னோடு தவறாக உறவு வைத்துக் கொள்ள முற்பட்டால் அதைத் தவிர்த்துவிடு.

"கட்டாயம் உன்னை திருமணம் செய்து கொள்வேன்" என்று சத்தியம் செய்து கொண்டு நிச்சயம் உன்னை பயன்படுத்திவிட்டு ஏமாற்றிவிடுவார்கள். திருமணத்திற்கு முன் உன் காதலனோடு நீ உறவு கொண்டால், நிச்சயம் உன் திருமணத்திற்கு பிறகு, ஏய் உன் புத்தி எனக்குத் தெரியாதா நீ கல்யாணத்துக்கு முன்னாலே வீட்டை ஏமாத்திட்டு என்னோடு சுத்துனவதான" என்பான். உன் காதலனை திருமணம் செய்ய முடியாமல் உன் பெற்றோர் பார்க்கும் மாப்பிள்ளையைத் திருமணம் செய்தால், உன் கணவருக்கு உன் பழைய காதல் தெரியவரும் போது சின்ன சின்ன விசயத்திற்குக் கூட "என்னடி அவன் நினைப்பாயிருக்கா" என்று உன்னை வாழ்நாள் முழுக்க சாகடித்துவிடுவார்.

எனவே, வாழ்கிற ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிடமும் நீ மகிழ்ச்சியோடு வாழ விழிப்பாய் இருக்க வேண்டும். உன்னை யாரும் ஏமாற்ற அனுமதிக்கக் கூடாது.

தன் காதலிக்காக, அவளுக்குப் பிடித்ததையெல்லாம் செய்து, தன் வார்த்தைகளாலோ, தன் செயலாலோ, அவளைக் காயப்படுத்திவிடக்கூடாது என்று, மிகுந்த ஜாக்கிரதையோடு, அவளின் பெண்மையை மதித்து, காதலுக்காக, தன் காதலிக்காக ஒட்டுமொத்த வாழ்க்கையை அர்ப்பணித்த எத்தனையோ ஆண்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

“பெண் இரக்கப்பட்டால் அவள் புள்ளத்தாச்சி” என்று சொல்வார்கள். விருப்பப்பட்டு ஆண்களோடு உறவு வைத்துகொள்ளும் பெண்களைவிட இரக்கப்பட்டு உறவு வைத்துகொண்டு தன் எதிர்காலத்தைக் கேள்விக்குள்ளாக்கி, அவளும் கண்ணீர் வடித்து, தன் பெற்றோரையும் வாழ்நாள் முழுவதும் கண்ணீர் வடிக்க வைத்த பெண்கள் எத்தனையோ பேர் உண்டு.

சினிமாவில் ஒரு பெண், ஆணைப் பார்த்தவுடன், ஓர் ஆண், பெண்ணைப் பார்த்தவுடன் காதலிப்பதுபோல் அதிகம் காட்டப்படுகிறது. நிஜ வாழ்வில் ஓர் ஆணிடம் பழகும்போது அது நண்பனாக இருந்தாலும் சரி, காதலனாக இருந்தாலும் சரி ஒருவனை உன் வாழ்விற்குள் அனுமதிக்கும்போது அவன் நல்லவனா, கெட்டவனா? அவனை ஏற்றுக் கொள்ளலாமா, ஏற்றுக்கொள்ளக்கூடாதா? என அலசி ஆராய்ந்துதான் நீ அவர்களுடன் பழக வேண்டும்.


இதை நான் ஏன் கூறினேன் என்றால் எத்தனையோ மாணவிகள் என்னிடம் புலம்பி இருக்கிறார்கள். அக்கா அவன் நல்லவன் என்று நம்பி நான் ஏமாந்துவிட்டேன். அவள் நல்லவள் என்று நம்பி நான் ஏமாந்துவிட்டேன் என்று தன் வாழ்வை இழந்து கண்ணீரோடு என் கண் முன் கதறும் அவர்களுக்கு என்னால் ஆறுதல்தான் சொல்ல முடிந்ததே தவிர அவர்கள் இழந்த வாழ்வை மீட்டுக்கொடுக்க முடியவில்லை.

யாரையும் ஏமாற்றாதே! யாரிடமும் ஏமாறாதே!

எனவே, மாணவிகளே! எப்படிப்பட்ட மனிதரையும் அடையாளம் கண்டுகொண்டு கையாள்வது உன் கையில்தான் உள்ளது..

“விழிப்பாய் இரு; நெருப்பாய் எழு!

**“ஆணின் காதல், வாழ்க்கையில் ஓர் அங்கம்; பெண்ணின் காதலோ அவளது முழு வாழ்வும்” -பைரன்**




## ஏமாற்றும் பெண்ணைத் தெரிந்துகொள்ள...

“காதலிக்கும்போது புத்திசாலிக்கும் முட்டாளுக்கும் இடையில் வித்தியாசம் கண்டுபிடிக்க முடியாது”

“காதல் மணல் கடிகாரம் போல. நெஞ்சு நிரம்ப நிரம்ப மூளை காலியாகிறது” - ஜூல் ரெனா

நீங்க என்ன செய்கிறீர்கள் தெரியுமா? படிக்க வருகிற இடத்தில் ஒரு பெண்ணைப் பார்க்கிறீர்கள். பார்த்தவுடன் அந்த பெண்ணைப் பிடித்து விடுகிறது. அவ எந்த ஊரு, அவ அப்பா, அம்மா யாரு, என்ன வேலை செய்றாங்க, அவ யாரையாவது காதலிக்கிறாளா? எதுவுமே தெரியாமல், அந்தப் பொண்ண தொடர்ந்து செல்வது, காதல் கடிதம் கொடுப்பது, நீ என்ன காதலிக்கலைன்னா நான் செத்து விடுவேன் என்று மிரட்டுவது; பிறகு அந்த பெண் உங்களைக் காதலிக்கும் இரண்டு பேரும் ஜாலியாக சுத்துவீங்க.

உனக்கு அந்தப் பெண்ணைப் பிடித்திருந்தா திருமணம் செய்வ, இல்லைன பாதியில கழட்டிவிட்டுப் போயிருவா, அதே போல அந்த பெண்ணுக்கும் உன்னை பிடித்திருந் தால் உன்னை திருமணம் செய்யும். இல்லை உன்னைவிட பணக்காரப் பையன் கிடைத்தால் உன்னை கழட்டிவிட்டுட்டு வேற பையனோடு போயிருவாள். இப்படி பெண்களும் ஏமாற்ற ஆரம்பித்து விட்டார்கள்.

ஒரு நாள் காலை 10 மணிக்கு என் அலுவலகத்திற்கு ஒரு மாணவனை அழைத்துகொண்டு அவனின் அம்மா வந்தாங்க.

“என் பையன் நல்லாதான் படிச்சிட்டிருந்தான், கொஞ்ச நாளா அவன் சரியில்லை. என்னன்னு கேட்டா சொல்ல மாட்டேன்றான். எனக்கு பயமாயிருக்கு” என்றார்.

“12ஆம் வகுப்பு படிக்கும் ரவிக்கு பரீட்சை பயம்தான் இருக்கும். கவலைப்படவேண்டாம்” என்று அவன் அம்மா விடம் சொல்லிவிட்டு, “என்ன தம்பி உனக்கு பிரச்சனை” என்று கேட்டவுடன், “உங்ககிட்ட தனியாக பேசவேண்டும்” என்றான். அவன் அம்மா வெளியே சென்றவுடன், “ரவி உங்க அம்மா இல்லடா, இப்ப சொல்லு” என்றேன்.

“அக்கா என் வகுப்புல படிக்கிற புஷ்பா என்ன லவ் பண்றேன்னு சொன்னா. எனக்கும் அவளை ரொம்ப பிடிக்கும். ஆனால் என்ன காரணம்னு தெரியல கொஞ்ச நாளா அவ வேற பையங்கூட நட்பாயிட்டா. என்ன கண்டுக்க மாட்டேங்கிறா. என்னால படிக்க முடியல. புத்தகத்தை திறந்தாலே அவ முகம் தான் தெரியுது. என்னால் அவள மறக்க முடியுல” என்றான்.

“இன்னும் 2 மாசத்துல +2 பரிட்சை. என்னால் படிப்பில் கவனம் செலுத்த முடியல. மனசு ரொம்ப வலிக்குது காரணமே இல்லாம என்னை புஷ்பா வெறுத்தது எனக்கு ரொம்ப மனசு கஷ்டத்தக் கொடுத்திருச்சு. என் அம்மா பாவம் என்னால் அவங்ககிட்ட சொல்லவும் முடியல” என்றான்.

நான் ஒரு கல்லூரிக்குச் சென்றிருந்தேன், ஒரு குழுவாக மாணவர்கள் அமர்ந்துகொண்டு, எல்லோரும் ஒரு மாணவனிடம் மாறி மாறிப் பேசிக்கொண்டிருந்தார்கள். என்ன நடக்கிறது என்று புரியாமல், அருகில் சென்று பார்த்தால் அந்த மாணவன் வெளிச்சத்தின் வாலண்டியர் அருண்.

‘என்னடா பண்றீங்க’ என்றவுடன், “அக்கா வாங்க, எங்க காலெஜ்ல ஒரு சங்கம் ஆரம்பிச்சியிருக்கோம். அதற்கு பேர் என்ன தெரியுமா? பெண்களால் ஏமாற்றப்பட்ட ஆண்கள் சங்கம்”. அருண் ஒரு பெண்ணை லவ் பண்றான்.

அவனும் இந்த சங்கத்துல வந்து சேரக்கூடாதுனு தான் நாங்க அட்வைஸ் பண்ணிக்கிட்டுருக்கோம். இப்பவே இதுல 47 பேர் உறுப்பினர்" என்றார்கள்.

வினோத் தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தான்...

"நானும் மீனாவும் 2 வருசமா ரொம்ப சின்சியரா லவ் பண்ணினோம். பீச்சு, பார்க்கு, சினிமானு எல்லா இடமும் சுத்தியிருக்கோம். ஒரு நாள் லீவுக்கு ஊருக்கு போனவ போன் பண்ணவேயில்ல. அவ எப்பவும் ஊருக்கு போனா ஒரு நம்பர்லயிருந்து போன் பண்ணுவாள். அந்த நம்பருக்கு நான் போன் பண்ணினேன் ஒரு ஆள் எடுத்து யாருங்க வேணும் என்றார். சார் நான் மீனாவோட ப்ரெண்ட் என்றவுடன், "ஓ! காலேஜ் ப்ரெண்டா" என்றார். "ஆமா, நீங்க யாரு" என்று கேட்டேன். "நான் மீனாவ கல்யாணம் பண்ண போறவன்"னு சொன்னாரு பாருங்க. அப்படியே தூக்கி வாரிப் போட்ருச்சு. அடிப் பாவி என்னை ஏமாத் என் பணம், போன், கேமரா எல்லாம் போச்சு, அதெல்லாம் விட என் நேரம்" என்று கூறி வருத்தப்பட்டான்.

இப்போ வருத்தபட்டு என்ன பயன். திட்டமிட்டே பணம் வைத்திருக்கும் பையனைப் பார்த்து நான் உன்னை காதலிக்கிறேன் என்று அவனிடம் உள்ள பணத்தை எல்லாம் செலவு செய்துவிட்டு, போடா போடா என்று டாடா சொல்லி வேறு பையனைத் தேடி செல்லும் பெண்களும் உண்டு.

விழுப்புரத்தைச் சேர்ந்த மூர்த்தி ITI படித்துக்கொண்டே பகுதி நேர வேலை செய்து வந்தான். அவனுக்கு பெற்றோரும் இல்லை, உறவினரும் இல்லை. தனியாக வாழ்ந்துவந்தான். ITI படிக்கும்போது அவனுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையே காதல் ஏற்பட்டிருக்கிறது.

இருவரும் நல்ல காதலர்களாகவே இருந்திருக்கின்றனர். மூர்த்தி அந்தப் பெண்ணுக்காக உயிரையும் கொடுக்கும் அளவிற்கு அவள் மேல் அன்பு வைத்திருந்தான். அவளுக் காக தனது பணத்தையும், நேரத்தையும் எவ்வளவோ செலவழித்தான் சில மாதங்களுக்குப் பிறகு, அந்தப் பெண்

மூர்த்தியிடம் வந்து "நாம் இருவரும் திருமணம் செய்து கொள்ளலாம். நீ வந்து என் பெற்றோரிடம் பேசு" என்றாள்.

சரியென அவனும் அவளின் வீட்டிற்கு சென்று திருமணம் பற்றிப் பேசியுள்ளான். ஆனால் அந்தப் பெண்ணின் பெற்றோரோ அவர்களது திருமணத்திற்கு மறுப்புத் தெரிவித்தனர். "யாருமில்லாத அனாதைக்கெல்லாம் என் பொண்ண நான் கட்டிக் கொடுக்கமாட்டேன்" என்று கூறிவிட்டனர் அவளது பெற்றோர். மேலும் தனது மகளுக்கு திருமணம் செய்து வைக்கப் போவதாகவும் கூறியுள்ளார்.

பணத்திற்கு ஆசைப்பட்ட அந்தப் பெண்ணும் மூர்த்தியிடம் வந்து, "நீ என்னை மறந்திடு, நமக்கு ஒத்துப்போகாது" என்று கூறியிருக்கிறாள். மேலும் அந்தப் பணக்கார மாப்பிள்ளையுடன் பைக்கில் ஊர் சுற்றுவதும், இவன் இருக்கும் இடங்களுக்கு அந்த மாப்பிள்ளையுடன் சென்று அவனுக்கு வெறியையும், கோபத்தையும் அதிகப்படுத்தியிருக்கிறாள். இதனால் மனமுடைந்த மூர்த்தி, எங்களது மாணவர் உதவி எண்ணை (Students Help Line) தொடர்புகொண்டான். அவனுக்கு தேவையான ஆறுதலையும், ஆலோசனைகளையும் கூறினேன். அவனது நட்பின் வலிமை அவனுக்கு கை கொடுத்தது. அவனது நண்பர்கள் அனைவரும் சேர்ந்து அவனுக்கு ஒரு CD கடை ஆரம்பித்து கொடுத்தனர். அதில் நல்ல முன்னேற்றம் கண்டான் மூர்த்தி.

ஆண்களை மட்டுமே சாடும் இந்த சமூகத்தில் இது போன்ற வக்கிர புத்தி உள்ள பெண்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இப்போது மூர்த்தி ஒரு நல்ல நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

காதல் என்ற பேரில் யாரும் யாரையும் ஏமாற்றினாலோ, யாரும் யாரிடமும் ஏமாந்தாலோ அந்த வலியை, சுமையை அவர்கள் மட்டும்தான் சுமக்க முடியும் வாழ்க்கையில் மகிழ்ச்சியாக வாழ எந்த சூழ்நிலையிலும் உனக்கு குற்ற உணர்வு இருக்கக்கூடாது. மற்றவர்களுக்கு தீங்கு செய்தால் அது உன் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து வரும்.

சாதரணமாக சொல்வார்கள் என்ன பாவம் செய்தானோ இந்த பாடுபடுகிறான் என்று. படி தம்பி.

தயவுசெய்து உன் இலக்கை நோக்கி போ காதலித்தால் திருமணம் செய்ய வேண்டும்.

படிக்கும் வயதில் காதலித்தால் படிப்பைப் பாதியில் விட்டு விட்டு திருமணம் செய்வாய். செல்ல குழந்தை பிறக்கும், என் பெற்றோர் எனக்கு புதிய உலகைக் காண்பிக்க உள்ளனர் என்ற நம்பிக்கையோடு உன் மடியில் தவழும் உன் அன்பு குழந்தை பசிக்காக அழும்போது, பாதியில் விட்டு விட்ட படிப்பு, 'மூடனே உன் காதலுக்காக என்னை தூக்கி எறிந்தாயே, இன்று உன் நிலையைப் பார்த்தாயா?' என்று உன்னைப் பார்த்து சிரிக்கும்.

பெற்ற பிள்ளைக்கு உன்னால் நல்வாழ்வை அமைத்துக் கொடுக்க முடியவில்லை; கட்டின மனைவிக்கு நிம்மதியை கொடுக்க முடியவில்லை; எனவே மற்றவர்கள் உன்னை ஏமாற்றலாம்; தீங்கு செய்யலாம்; ஆனால் நீ முடிந்தவரை நல்லவனாக வாழ முயற்சி செய்.

கல்லூரியில் படிக்கும் ஒவ்வொரு பெண்ணின் குடும்ப சூழ்நிலையைத் தயவுசெய்து ஒரு நிமிடம் யோசித்துப் பார்.

ஒரு பெண்ணைக் கல்லூரிக்கு அனுப்புவதற்கு அவளின் பெற்றோர் என்ன பாடுபட்டிருக்க வேண்டும். அங்க இங்க கடன் வாங்கி கல்லூரிக்கு அனுப்பிவிட்டு என் பொண்ணு படித்துப் பெரிய ஆளா வருவாள் என்ற ஆவலோடு காத்திருக்கும் அந்தப் பெற்றோரை என்றைக்காவது நினைத்துப் பார்த்தது உண்டா? தயவுசெய்து சொல்றேன் தம்பி, ஒரு பெண்ணைப் பார்த்து நான் உன்னைக் காதலிக்கிறேன் என்று சொல்வதற்கு முன்பு ஒரு நிமிடம் யோசி. ஒரு பெண்ணின் மனம் கெட்டுப்போக எந்த சூழ்நிலையிலும் நீ காரணமாக இருக்கக் கூடாது.

**தயவுசெய்து எந்தப் பெண்ணையும் ஏமாத்திவிடாதே! எந்த பெண்ணிடமும் ஏமாந்து விடாதே!**



## பெற்றோர்களின் உறவு
## என்னை பாதிக்கிறது; என்ன செய்ய?

திருச்சியில் ஒரு பயிற்சிக்காகப் போயிருந்தேன். இயல்பாக ஒவ்வொரு அமர்வு முடிந்தவுடன் பல மாணவர்கள் என்னை தனியாக சந்தித்துப் பேச வேண்டும் என்று சொல்வார்கள். அப்போது 11ம் வகுப்பு மாணவி வந்தாள்.

“அக்கா இரவு நேரத்தில் என் அப்பா, அம்மா உறவு என்னை பாதிக்கிறது. எங்கள் வீட்டில் தனி அறை கிடையாது. இடையில் நான் பாத்ரூம் போக எழுந்தால் அலங்கோலமாகப் படுத்திருக்கும் என் பெற்றோரைப் பார்த்து எனக்குக் கோபம்தான் வருகிறது. எத்தனையோ நாள் கதவைத் திறந்து வெளியே வருவேன். விடியும் வரை தெருவில் ஜனங்களோடு படுத்துறங்கிவிட்டு பிறகுதான் வீட்டிக்குச் செல்வேன், என்னால் படிப்பில் கவனமே செலுத்த முடியவில்லை” என்றாள்.

சட்டம் படிக்கும் மாணவர்களுக்கு ஒரு நாள் ஆளுமை பயிற்சியில் மதிய வேளையில் ஒவ்வொருவரும் தங்கள் வாழ்வில் நடந்த மறக்க முடியாத துக்ககரமான சம்பவங்களைப் பகிர்ந்து கொண்டார்கள். சரவணன் என்ற மாணவன் என் வீட்டில் தூங்குவதுதான் துக்கமான சம்பவம் என்றான்.

“என்னடா உன் வீடு எப்படி உனக்குத் துக்கமாகும்” என்று கேட்டேன்.

“எங்க வீடு அரசாங்கம் கட்டி கொடுத்த இலவச வீடு. என் அண்ணனுக்கு திருமணம் ஆனது. என் அப்பா

கோயில் வாசலில் படுத்து கொள்வார். எல்லா அரசாங்க வீடும் ஒரு அறையைக் கொண்டதுதான் நடுவில் ஒரே ஒரு தடுப்பு சுவர்தான் இருக்கும். திருமண ஆன என் அண்ணனும் அண்ணியும் தடுப்பு சுவருக்கு அந்தப் பக்கம் படுப்பார்கள்.

நானும் எங்க அம்மாவும் இந்தப் பக்கம் படுப்போம். ஒரு சில இரவில் தூக்கம் வராமல் விழித்தால் என் அண்ணன் அண்ணியின் உறவு என்னை பாதிக்கும்.

அந்த இடத்தில், நான் எழுந்தால் கூட அவர்களுக்குத் தெரியும். அவர்களைத் தொந்தரவு செய்யக்கூடாது என்று நினைத்துப் படுக்கவும் முடியாமல், எழுந்து வெளியே போகவும் முடியாமல் பாலியல் உணர்வு மேலோங்கி நான் படும்பாடு எனக்கு மட்டும்தான் தெரியும். இது என் வேதனை மட்டும் அல்ல, பெரும்பான்மையான ஏழை குடும்பங்களிலும் இதுதான் நிலை" என்று கூறி "தன் வாழ்நாளில் வீட்டின் சூழ்நிலையை நிச்சயமாக மாற்றுவேன்" என்றான்.

அவன் வேதனையோடு சொன்ன செய்தி, "நியாயமான உறவான கணவன்-மனைவி உறவை, மறைவாக வாழ முடியாத சுழ்நிலையில் வாழும் இந்தச் சமூக அமைப்பு முறையை எப்படி ஏற்றுக்கொள்வது" என்றான்.

ஒரு பணக்கார கல்லூரிக்குச் சென்றிருந்தேன். வட மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு பையன் வந்தான். "மேடம் இவன் என் ப்ரண்ட், பெயர் சந்துரு. கொஞ்சம் நாளாகவே ஒரு மாதிரியிருக்கான், கவுன்சிலிங் கொடுங்கள்" என்றான்.

என்னடா பிரச்சனை" என்றேன்.

"நான் இந்த காலேஜ் ஹாஸ்டல்லதான் தங்கிப் படிக்கிறேன். எனக்கு எங்க அம்மாவை ரொம்ப பிடிக்கும். நான் லீவுக்கு வீட்டுக்கு போகும்போது எங்க அம்மாகிட்டதான் படுப்பேன். போன வாரம் எனக்கு

செமஸ்டர் லீவு. நான் ஊருக்குப் போயிருந்தேன். நான் என் அம்மா மடியில் படுத்து கொண்டு டி.வி பார்த்துக் கொண்டிருந்தேன். என் அப்பா என் அம்மாவை வா வா என்று அழைத்துக் கொண்டிருந்தார். அம்மா “வர்ரேங்க, போய் படுங்க என்று சொல்லியும் அப்பா போகவில்லை. வேறு வழியில்லாமல் சந்துரு தூங்குடா என்று கூறிவிட்டு, அம்மா அப்பா இருவரும் படுக்கை அறைக்குச் சென்று விட்டார்கள்.

ஆனால், எனக்குத் தூக்கம் வரவில்லை. மனதில் ஏதேதோ தவறான எண்ணங்கள், ஒரு நிமிடம் என்னை நானே கட்டுப்படுத்தி கொண்டு என் அறையை நோக்கி போனேன். எதிர்பாராத விதமாக அவர்களின் படுக்கையறை ஜன்னல் திறந்திருந்தது. “என்னையும் அறியாமல் நான் ஜன்னலை எட்டிப் பார்த்தேன். என் பெற்றோர்களின் உறவு என்னை பாதித்தது. ஆனால் என்னால் என் அம்மாவை காலையில் பார்க்க முடியவில்லை. நான் உடனே கிளம்பி என் நண்பன் வீட்டுக்குச் சென்றுவிட்டேன். காதல் உணர்வு வரும்போதெல்லாம் என்னால் என்னைக் கட்டுப்படுத்த முடியாமல் விபச்சாரியைச் சந்திக்கச் சென்றேன் உறவு கொள்ள வேண்டும் என்பதற்காக. எனக்குள் ஒரே பயம். எனக்கு எய்ட்ஸ் வந்துவிட்டால் என்ன செய்வதென்று, பயந்து ஓடி வந்துவிடுவேன். காதல் காட்சிகளைப் பார்க்கும் போது என் உடல் படும்பாட்டை என்னால் சொல்ல முடியவில்லை” என்றான்.

இதற்கெல்லாம் காரணம் என்ன? முதல் சம்பவத்தில் அவர்களின் வீட்டு சூழ்நிலை. ஒரு வீடு என்றால் அதில் பல அறைகள் இருக்க வேண்டும். குறிப்பாக படுக்கை அறையும், சமையல் அறையும் கண்டிப்பாக இருக்க வேண்டும். இன்று அனைத்து கிராமங்களிலும், நகர்ப்புறத் திலும், ஏழை மக்கள் வாழும் பகுதிகளில் ஒழுங்கான வீடு இருக்கிறதா?

ஹவுசிங் போர்டு என்ற பெயரில் அடுக்கு மாடி கட்டிடங்கள் உள்ளன. ஆனால் அந்த வீட்டில் கூட மிகச் சிறிய அறைகளே உள்ளன. பெரும்பான்மையான மனிதர்கள் இப்படித்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த குடும்பப் பின்னணியில் இருந்து வரும் மாணவ, மாணவிகளின் உளவியல் எப்படி இருக்கும். பயங்கரமான மன உளச்சலை ஒவ்வொரு மாணவனும் எதிர்கொள் கிறார்கள்.

இரண்டாம் சம்பவத்தில் தங்கள் உறவு தன் குழந்தையைப் பாதிக்கும் என்ற அக்கறை அந்தத் தகப்பனுக்கு இல்லை. அவருக்கு மட்டுமல்ல எந்தப் பெரும்பான்மையான தகப்பன்மார்களுக்கும் அந்த எண்ணம் இல்லை. நம் வீட்டில் வயது வந்த பிள்ளைகள் இருக்கிறார்கள் என்பதைப் பல நேரங்களில் பெற்றோர்கள் கவனிக்கத் தவறிவிடுவதன் விளைவு... வளர்ந்து வரும் மாணவர்களும் தவறு செய்கிறார்கள்.

என் பெற்றோரின் உறவு அல்லது என் அண்ணன் அண்ணியின் உறவு என்னைப் பாதிக்கிறது என்கிறாய். நீ யோசித்தால் அதற்கான காரணம் என்ன என்று புரியும். சற்று யோசி, சரியான இடம் இல்லை, நல்ல வீடு இல்லை, இந்நிலையை மாற்ற வேண்டும், அல்லது நீ மாற்றுவாய் என்ற நம்பிக்கையில்தான், உன்னை கல்லூரிக்கு அனுப்பி யிருக்கிறார்கள். எனவே தயவுகூர்ந்து ஒவ்வொரு நேரத்தையும் பயன்படுத்து.

இன்று மாவட்டங்கள் தோறும், நகரங்கள் தோறும் விடுதிகள் உள்ளன. மாணவ, மாணவிகள் தங்கிப் படிக்க வேண்டும் என்பதற்காக, மூன்று வேளை சோறும், தங்க இடமும் நம் முன்னோர்கள் செய்த தியாகத்தால் நமக்குக் கிடைத்திருக்கிறது. அரசாங்கத்தில் இன்று எத்தனையோ சலுகைகள் உள்ளன. இலவச விடுதி, உணவு, புத்தகம், கல்வி உதவித் தொகை என படிப்பதற்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன.


திருச்சி அண்ணா பல்கலைக்கழகத்தில் படித்த இறுதி ஆண்டு மாணவனைப் போன வருடம் சந்தித்தேன். தங்க இடம் இல்லாமல் திருச்சி மெயின்கேட் பஸ்டாண்டில் தங்குவான். பையை தனக்குத் தெரிந்த டீக் கடையில் வைத்திருந்தான்.

“என்ன தம்பி இங்க பையை வைத்திருக்கிறாய்” என்று கேட்டதற்கு, “அக்கா நான் இங்கதான் தூங்குவேன்” என்றான்.

தனது இறுதியாண்டுப் படிப்பைப் போன வருடம் முடித்துவிட்டு ஒரு பெரிய கம்பெனியில் வேலை செய்கிறான்.

எத்தனையோ மாணவர்கள் தங்க இடம் இல்லாமல் ஒரு வேளை நல்ல சோறு கூட கிடைக்காமல் கஷ்டப்படும் சமூக சூழ்நிலையில், உனக்கு நல்ல வாய்ப்பு கிடைத்திருப்பதாக எண்ணி நேரத்தைச் சரியாகப் பயன்படுத்து. உன் வாழ்வில் வெற்றி பெற்று நீ வளர்ந்து வந்த சமூக சூழ்நிலையை மாற்று. அடிப்படை தேவையான உணவு, உடை, இருப்பிடம் கல்வி மற்றும் மருத்துவம் முறையாகக் கிடைக்க உன் கல்வி அறிவைப் பயன்படுத்து.

“உன் முன்னோர்களின் தியாகத்தால் நீ வாழ்கிறாய். உன் தியாகத்தில் உன் தலைமுறை வாழ வேண்டும்”



பாலியல் தொந்தரவு செய்யும் அப்பாவை
என்ன செய்ய...?

மாணவிகளிடம் அவர்களின் உளவியல் குறித்துப் பேசுவதற்காக ஒரு கல்லூரிக்கு என்னை அழைத்தார்கள். விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவிகள் சுமார் 800 பேர் இருந்தார்கள். பலர் என்னைத் தனியாகச் சந்திக்க வேண்டும் என்றார்கள். ஒரு தனி அறையை ஒதுக்கிக்கொடுத்தார்கள். ஒரு நாள் முழுவதும் பல மாணவிகள் என்னை சந்தித்து யாரிடமும் சொல்ல முடியாத வலிகளை என்னோடு பகிர்ந்துகொண்டார்கள். ஒரு பெண் மெதுவாக வந்து அக்கா என்றவள், கண்ணில் தாரை தாரையாக கண்ணீர்.

“எனக்கு எங்க அப்பாவ ரொம்பப் பிடிக்கும். ஒரு நாள் என் அம்மா அவுங்க அக்கா பொண்ணு கல்யாணத்துக்கு போயிட்டாங்க. அடுத்த நாள் பரீட்சை எனக்கு. படிச்சிட்டு அப்படியே தூங்கிட்டேன். யாரோ என்னை தொந்தரவு செய்வதுபோல தோணுச்சி. கண் விழித்துப் பார்த்தா என் அப்பா வழக்கத்துக்கு மாறாக என்கிட்ட படுத்திருந்தார். என்னப்பா என்றவுடன் ஒண்ணுமில்லை என்றவர் என்னைக் கட்டிப்பிடித்து... ஐயோ! அக்கா என் வாழ்க்கையே போச்சு.. உன் அம்மாகிட்ட சொன்னா அவள கொன்னுடுவேன்னு மிரட்டினாரு அக்கா. என் அம்மா ரொம்ப பாவம். இந்தச் செய்தி தெரிந்தால் அவுங்க செத்துடுவாங்க. எனக்கு வீட்டுக்கு போகவே பிடிக்கல, லீவு விட்டாங்கனா என் அம்மாகிட்ட ஏதாவது காரணம் சொல்லிட்டு இங்கேயே இருந்துடுவேன். பல நாள் தற்கொலை செய்ய முயற்சி செய்திருக்கிறேன். யாருக்குமே தெரியாத என் மன வலியை உங்ககிட்டதான் சொல்றேன்” என்று அழுதாள்.

இவளைப் போல தன் சொந்த அப்பாவால் பாலியல் தொந்தரவுக்குள்ளான 17 மாணவிகள் அன்று என்னிடம் கண்ணீரோடு தங்கள் வேதனைகளைப் பகிர்ந்துகொண்டு விதியை நொந்து கொண்டார்கள்.

இரண்டாமாண்டு கணிதம் படிக்கும் மாணவி, "எனக்குத் தொடர்ந்து தொந்தரவு கொடுத்த என் அப்பாவை, அவர் தூங்கிக்கொண்டிருக்கும்போது காலில் அம்மிக்குழவியைத் தூக்கிப்போட்டுட்டேன்" என்று கூறும்போது என்ன சொல்வது என்று தெரியாமல் வாயடைத்துப்போனேன்.

விஜி 9ஆம் வகுப்பு படிக்கிறாள். தன் அண்ணன் மகள் காதுகுத்துக்குத் தன் அப்பாவுடன் சென்றுவிட்டு மோட்டார்பைக்கில் திரும்பிவந்து கொண்டிருந்தபோது ஒரு அடர்ந்த சவுக்குத்தோப்பு வந்தது. என்ன நினைத்தாரோ தெரியவில்லை வண்டியை நிறுத்திவிட்டு, தன் சொந்த மகளை நாசம் செய்து விடுகிறார். பிறகு அந்தப் பெண் கர்ப்பமாகிவிடுகிறாள்.

இதை அறிந்த விஜியின் அண்ணன் வெளியே தெரிந்தால் அவமானம் என்று தற்கொலை செய்து கொண்டான். அவள் வாழ்வில் நடந்த இந்தத் துயர சம்பவத்தைச் சொல்லும்போது அப்பப்பா...

ஏதோ அலுவல் வேலையாக வெளியே போய்விட்டு வீட்டிற்கு வந்தேன். வீட்டில் உள்ள மாணவர்கள் அக்கா உங்களை பார்க்க யாரோ வந்திருக்கிறார்கள் என்றனர். "யாரும்மா நீ... என்றவுடன் "அக்கா என் பேர் கோமதி. எங்க அம்மா, அப்பா இருவரும் நல்ல வேலை செய்கிறார்கள். நான் 5ம் வகுப்பு படிக்கும் போது என் அம்மா மேக்ஸ் டியூசனுக்கு அனுப்பி வைத்தார்கள். என்னுடைய மேக்ஸ் சார் அவருடைய வீட்டில் வைத்துதான் டியூசன் எடுப்பார். ஒரு நாள் என் வலது கையை பிடித்து அவருடைய ஆண் உறுப்பில் வைத்து என்னை ஏதேதோ செய்யச் சொன்னார். நான் மீண்டும் டியூசனுக்குப்

போகவில்லை. அது என் மனதில் ஆழமான வலியை உருவாக்கியது. அதில் இருந்து எனக்கு ஆம்பளைங்களே பிடிக்காது.

நான் கல்லூரி படித்துக் கொண்டிருந்த போது, கல்லூரியில் உள்ள கணேஷ் என்னிடம் மிகவும் அன்பாக இருப்பான். யாரிடம் பகிர்ந்துகொள்ள முடியாத அந்தச் சின்ன வயது சம்பவத்தை முதன்முதலாக நான் அவனிடம் கூறினேன். அவன் அதைப்பற்றி கவலைப்படக்கூடாது. அது நடந்து முடிந்து விட்டது என்று சொல்லி என்னை ஆறுதல் படுத்தினான்.

நானும் அவரும் காதலித்தோம். என் பெற்றோருக்கு எங்கள் காதல் தெரியும் அவர்களும் கணேஷை ஏற்றுக் கொண்டார்கள். ஒரு நாள் TNPSC பரிச்சை எழுத வேண்டும் என்பதற்காக என் அம்மா, என் மாமாவோடு என்னை அனுப்பி வைத்தார்கள். என் அம்மாவின் மூத்த அண்ணன் அவர். நாங்க இருவரும் இரயிலில் புறப்பட்டு விடியற்காலை கோயமுத்தூர் வந்தடைந்தோம். குளித்து உடை மாற்ற வேண்டும் என்பதற்காக என் மாமா லாட்ஜில் ரூம் போட்டார். இரவு 10மணிக்கு தான் பஸ் நான் தேர்வு எழுதிவிட்டு மாலை அறைக்கு வந்துவிடேன்.

என் மாமா, "வா கோமதி வந்து உட்காரு, போன் பண்ணி காபி கொண்டு வர சொல்கிறேன்" என்று எழுந்து போனார். டி.வி சத்தமாக ஓடிக் கொண்டிருந்தது. ஏதாவது படம் ஓடும் என்று எண்ணி 10மணிக்குத்தானே பஸ், அதுவரை படம் பார்க்கலாம் என்று டிவியை நோக்கி அமர்ந் தேன். ஏதோ ஆபாசமான படம் ஓடிக்கொண்டிருந்தது.

"மாமா! அசிங்கமான படம் ஓடுது!" என்றேன்.

"உனக்காகத்தான் போட்டிருக்கேன் வா நாம் இருவரும் சேர்ந்து இதை பார்க்கலாம்" என்றார்.

கோபமடைந்த நான், "மாமா இந்த மாதிரி எல்லாம் எங்கிட்ட வைச்சுக்காதிங்க நான் எங்க அம்மாகிட்ட

சொல்லிடுவேன்'' என்றேன். உடனே "ஏய் ரொம்ப பண்ணாத வாடி'' என்றவர், என் சேலையைப் பிடித்து இழுத்து என்னை வலுக்கட்டயமாக கட்டிலில் கிடத்தி பலாத்காரம் செய்ய முயற்சித்தார். அருகிலுள்ள மேஜையில் வெங்கலத்தினால் ஆன பூ ஜாடி இருந்தது. அதை எடுத்து மாமாவின் தலையில் அடித்துவிட்டு நான் பாத்ரூம்க்குள் ஓடிப்போய் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டேன்.

பிறகு 2 மணி நேரம் நான் பாத்ரூம் கதவைத் திறக்கவே யில்லை, உயிர்பயத்தில் வாழ்ந்தேன் என்றால் அந்த தருணம்தான். பிறகு வெளியே சத்தம் ஏதும் கேட்காததால் மெதுவாக கதவைத் திறந்தேன். என் மாமா கட்டிலில் மயங்கியவாறு படுத்திருந்தார். மெதுவாக என் சேலையை எடுத்து கட்டிகொண்டு ஓடி வந்து விட்டேன். நான் வேறு பஸ் பிடித்து வீட்டிற்கு போய் விட்டேன்.

போனவுடன் அம்மா, "என்னடி மாமா போன் பண்ணிருந் தாங்க அவுங்களுக்கு ஏதோ அவசர வேலையாம். அதனால் உன்னை பஸ் ஏத்தி அனுப்பிவைத்துவிட்டதாக சொன்னார்'' என்றார்.

இன்று வரை என் அம்மாவிடம் இந்தச் சம்பவத்தை பற்றி நான் சொல்லவில்லை. இயல்பாகவே என் அப்பா விற்கு, என் அம்மா குடும்பம் என்றால் ரொம்ப எலக்காரம். இதை என் அப்பா தெரிந்துகொண்டால் என் அம்மாவை அடிப்பார் என்று யாரிடமும் சொல்லவில்லை என்றாள்.

நான் அந்த ஹோட்டல்ல இருந்து வந்தவுடன் என் மாமா, என் கணேஷை சந்தித்து, "நானும் கோமதியும் இன்னைக்கு புல்லா ஜாலியாய் இருந்தோம்'' என்று சொல்லியிருக்கிறார். கணேஷ் கோபப்பட்டு மாமாவைக் கெட்ட வார்த்தை சொல்லித் திட்டி விடுகிறான். மாமா அவனைக் கோபப்பட்டு அடித்துவிடுகிறார்.

"இந்த சம்பவத்தை உன் பெற்றோரிடம் கூறு'' என்று கணேஷ் என்னை தொந்தரவு செய்கிறான். இது என்

அப்பாவிற்கு தெரிந்தால் என் அம்மாவைக் கொன்று விடுவார். இது என் அம்மாவுக்கு தெரிந்தால் நோய்வாய்பட்டுவிடுவார் என்று பயந்து நான் யாரிடமும் சொல்லவில்லை" என்றாள்.

இதைப் போல எத்தனையோ கண்ணீர் அனுபவங்களை வெளியே சொல்லவும் முடியாமல், சாகவும் முடியாமல் தவிக்கும் என் அன்புக் கண்மணிகளே! எந்தச் சூழலையும் தைரியமாக எதிர்கொள்ளக் கற்றுக்கொள்ளுங்கள்.

தைரியத்தை எந்தக் கடையிலும் வாங்க முடியாது. தன்னம்பிக்கை அரைக் கிலோ கொடுங்க, தைரியம் ஒரு கிலோ கொடுங்க என்று சந்தையில் காய்கறி வாங்குவது போல வாங்க முடியாது. தைரியத்தையும் வளர்த்துக்கோ பாப்பா, பிளீஸ்....

தைரியத்தை உனக்குள் நீயே வளர்த்தெடுக்க வேண்டும். சமயம் பார்த்து உன் அம்மாவிடம் உனக்கு நடக்கும் கொடுமைகளை சொல்ல முயற்சி செய். அல்லது உன் நண்பர்கள் மூலம் உன் அம்மாவிற்குத் தெரியப்படுத்து. வெளியே தெரிந்தால் உன் குடும்பம் அவமானப்படும் என்று நீ நினைத்தால் யாரிடமும் சொல்ல முடியாமல் உனக்கு நடந்த கொடுமையை, நடக்கும் பாலியல் தொந்தரவுகளை நினைத்து நினைத்து மன வலியால், நீ மனநோயாளியாகி விடுவாய். அன்றைக்கு உன் வாழ்க்கைத் தீர்வு சொல்ல யாரும் வர மாட்டார்கள். தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் அதைத் தட்டிக்கேட்க சுனாமியாய் நீ பொங்கியெழ வேண்டும். மெழுகுதிரியைப் போல அமைதி யாய் எரிந்து கொண்டிருக்கும் உன் வாழ்வை சீரழிக்க யார் நினைத்தாலும் நெருப்பாய் சுட்டெரிக்கும் அக்கினியாய் நீ மாற வேண்டும். ஆக்கத் தெரிந்த பெண்ணுக்கு அநீதியை அழிக்கவும் தெரிந்திருக்க வேண்டும்.




காதல் உணர்வைத் தூண்டிவிடும் ஊடகத்திலிருந்து காக்க....

**ஊ**டகம் ஒவ்வொரு மனிதனையும் ஆளுமை செலுத்துகிறது; வழிநடத்துகிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் சினிமா, டி.வி., இண்டர்நெட் உன்னை அடிமையாக்கி வைத்துள்ளது. உன் மூளையில் எந்தக் கருத்து அல்லது எந்தத் தகவல் பதிவாகியுள்ளதோ அந்தக் கருத்தின் படிதான் நீ நடந்துகொள்வாய். அடிப்படையில் இன்றைய ஊடகங்கள் என்ன கருத்தை உற்பத்தி செய்கிறார்கள் என்பதை நாம் சற்றுச் சிந்திக்க வேண்டும். ஊடகம் என்பது ஒரு கருத்தை மக்களிடம் வெளிப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் வலுவான ஆயுதம். இன்றைய ஊடகம் முதலாளிகளின் கையில் இருப்பதால் அவர்கள் அவர்களுக்கு ஏற்ற கருத்தை மக்களுக்கு வியாபாரம் செய்கிறார்கள். ஆக கருத்து வியாபாரம் ஆக்கப்படுகிறது.

ஒரு கல்லூரியில், ஊடகமும் அதன் விளைவுகளும் என்ற தலைப்பில் பேச தொடங்கும் முன் ஒரு மாணவியிடம் ஒரு கேள்வி கேட்டேன் ஊடகம் என்றால் என்ன? அதற்கு சத்யா மிகத் தெளிவாக, “உள்ளத்தில் ஊடுருவி எண்ணத்தை மாற்றி, சுய சிந்தனையைச் சாகடித்து மனித உணர்வுகளோடு விளையாடுவது” என்று அழுத்தமாகச் சொன்னாள்.. பல மாணவர்கள் கூறினார்கள், “சினிமா படங்களைப் பார்க்கும் போது எனக்கும் ஒரு பாய் ஃப்ரண்ட் இல்லையே?, கேர்ள் ஃப்ரண்ட் இல்லையே? என்று ஏங்கி இருக்கிறேன்” என்று.

அது வெறும் நிழல் படம் என்பதை பல நேரம் நாம் மறந்து விடுகிறோம். பணம் மட்டுமே அங்கு முதலிடம். ஒவ்வொரு தனி மனிதனும், நான் பணக்காரனாக வேண்டும், கோடீஸ்வரன் ஆகவேண்டும், என்னை இந்த உலகிற்கு பெரிய ஆளாகக் காட்ட வேண்டும் என்பதற்காக, அவர்களின் தகுதிக்கேற்ப, மூளையைப் பயன்படுத்தி கருத்துகளையும், கண்டுபிடித்த பொருள்களையும் விற்கிறார்கள், சுயமரியாதை யில்லாதவர்கள் தான் உடலையும் விற்கிறார்கள்.

முதலாம் ஆண்டு பொறியியல் கல்லூரில் படிக்கும் கோபால் என்ற மாணவன் சொன்னான், "முன்பெல்லாம் சினிமாவில் நடிக்கும் பெண்களுக்கு 10 முழம் துணி தேவைப்பட்டது, ஆனால் இப்போதெல்லாம் ஒரு மீட்டர் துணியிருந்தால் போதும். பணத்திற்காக அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்வார்களா?" என்றான்.

விளம்பரம் என்று எடுத்துக் கொண்டால் கூட உதராணமாக... "இந்த கீரீமை போட்டால் நீ சிகப்பாவாய் என்று திணிக்கப்படுவதால் கருப்பான அத்தனை பெண்களும் அவர்களைப் போல் ஆக வேண்டும் என்பதற்காக போலியான ஒன்றில் சிக்கி ஏமாந்து தவிக்கிறார்கள்"

ஒரு மாணவி என்னிடம் கூறினாள், "அந்த அக்கா போல் அழகா இருக்க ஆசைபடுறேன்".

நான் ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்கிறேன் யாரும் யாரைப் போலவும் ஆக முடியாது. எச்சூழலிலும் தன் சுயத்தை இழக்காமல் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். எல்லா நாடுகளிலும், அந்த நாட்டில் நடக்கும் சம்பவங் களைப் பிரதிபலிப்பது ஊடகம். அதோடு சேர்ந்து பொழுது போக்குகளும் கலந்து இருக்கும்.

ஆனால், நம் நாட்டில் முரண்பாடான விஷயங்கள் நடைபெறுகின்றது. காதலைப்பற்றிப் பேசக்கூடாது, பாலியல்

கல்வி பற்றி பேசக்கூடாது, என்று கூறிவிட்டு அனைத்து ஆபாசங்களையும் வண்ணத்திரையிலும், வெள்ளித்திரை யிலும் மிக அழகாக பேசிக்கொண்டும் காட்டிக்கொண்டும் இருக்கிறது இன்றைய ஊடகம்.


எனவே, மாணவர்களே, சத்யா குறிப்பிட்டதுபோல எந்த கருத்தியலும், எந்த உணர்வுகளும் உன் உள்ளத்தில் ஊடுருவ விடாமல், எண்ணத்தைச் சிதைக்காமல், உன் சுயசிந்தனையை இழக்காமல் வாழக் கற்றுக்கொள்.

ஊடகம் எதை வேண்டுமானலும் செய்யலாம்.

உன் காதல் உணர்வுகளைத் தூண்டலாம்,

உன் எண்ணத்தை ஊனமாக்கலாம்,

உன் உணர்வுகளைச் சிதைக்கலாம், உனக்குள் ஒரு தாழ்வு மனப்பான்மையை உருவாக்கலாம். அவர்கள் பணம் சம்பாதிக்க எதை வேண்டுமானாலும் செய்வார்கள். இந்த உண்மையைப் புரிந்துகொண்டு, ஊடகங்களின் மூலம் வரும் கருத்துகளைப் பகுப்பாய்வுச் செய்து ஏற்றுக் கொள்ளுங்கள். மாற்று ஊடகத்தை உருவாக்க முயற்சி எடுங்கள்.




# ஆசிரியர்கள் மீது காரணமில்லாக் கோபம்... ஏன்?

“அக்கா எனக்கு ஒரு வாத்தியாரைப் பிடிக்கல, அதனால அவர் நடத்துற பாடம் எதுவும் எனக்குப் பிடிக்கல. அவரக் கண்டாலே எனக்குக் கோபமா வருது... நான் என்ன செய்யணும்?” என்று ஒரு மாணவன் என்னிடம் கேட்டான்.

முன்பெல்லாம் மாதா, பிதா, குரு, தெய்வம் எனச் சொல்லிக் கொடுப்பார்கள். அப்போது குருவை கடவுளுக்கும் மேலே வைத்திருந்தார்கள். இன்று காலம் மாறி கணினியும் பாடம் நடத்துவதாலோ என்னவோ ஆசிரியர்களுக்கெல்லாம் பெயரை மாற்றி, ‘பிளேடு வாத்தியார்’, ‘அறுவை’, ‘ரம்பம் டீச்சர்’ எனப் பட்டப் பெயர் வைத்து, அவர்களைக் கேலி கிண்டல் செய்து அதில் மகிழும் மாணவர்களை நம்மால் காண முடிகிறது.

உளவியல்ரீதியாக ஒருவரை மனதார நேசிக்கும்போது அவர்களின் அன்பைப் பெறுவதற்காக, அவர்கள் விரும்பும் அத்தனை செயல்களையும் நாம் செய்வதுண்டு. அதைப் போலவே நாம் ஒருவரை நேசிக்கும்போது நம்மையும் அறியாமல் அவர் செய்யும் செயல்களையும் நேசிக்கிறோம், ஒருவரை நாம் வெறுக்கும்போது அவர் என்னதான் நல்லது செய்தாலும்கூட அவரை நம்மால் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. அதுபோலத்தான், நாம் தவறு செய்திருந்து ஆசிரியர் திட்டியிருந்தாலும் அல்லது சில விசயங்களைக் கண்டித்திருந்தாலும் அவர்களை நாம் வெறுக்கும்போது அவர்கள் செய்யும் நல்ல செயல்களையும் சேர்த்தே வெறுத்து விடுகிறோம். இது நடைமுறையில் எல்லா விசயங்களுக்கும் பொருந்தும். ஆசிரியரை நாம் வெறுத்த

உடனேயே அவர் நடத்தும் பாடத்தையும் நாம் வெறுத்து விடுகிறோம். உண்மையாகவே ஒரு நல்ல ஆசிரியர் கிடைப்பது ஒரு வரம்தான்.

உதாரணமாக நான் பள்ளியில் படிக்கும்போது எனக்கு நான்கு ஆசிரியர்கள் இருந்தார்கள். அவர்களில் லீத்திமணி மிஸ் ஆங்கிலமும், கிறிஸ்டோபர் மிஸ் கணக்கும், குணவதி மிஸ் இயற்பியலும், கமலாபாய் மிஸ் உயிரியலும் கற்பித்தார்கள். அவர்கள் நான்கு பேரும் மிக நெருங்கிய தோழியர். யார் அவர்களை அதிகம் நேசிப்பது என்கிற போட்டி மாணவியராகிய எங்களுக்குள் எப்போதும் இருக்கும். பள்ளி முதன்மை வாயிலுக்குள் ஆசிரியைகள் நுழையும் போதே வேகவேகமாக ஓடிப்போய், "வணக்கம் டீச்சர்" என்று சொல்லி, அவர்கள் எடுத்துவரும் மதிய உணவுப் பையை, "கொடுங்க டீச்சர். நான் எடுத்து வர்ரேன்" என்று வாங்கிக்கொள்வோம். அதில் அவ்வளவு மகிழ்ச்சி எங்களுக்கு. பெற்றோரை விட ஆசிரியரை அதிகமாக நேசித்த காலம் அது. நான்கு ஆசிரியர்களும் எப்போதும் எதையாவது ரகசியமாக பேசிக்கொண்டேயிருப் பார்கள். அவர்கள் மற்றவர்களைக் குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைத்திருக்கக் கூடும்.

ஒரு நாள் காலையில் ஆசிரியர்கள் அறையை சுத்தம் செய்வதற்கு என்னை அழைத்தார்கள். அப்போது அவர்கள் பேசிய சில விவரங்கள் என் காதுகளில் விழுந்தன. அவரவர் வகுப்பில் பின்தங்கிய மாணவரைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தனர். "அவ ஏன் உம்முனு இருக்கா? அவ முகத்தில ஏன் கலையேயில்ல, சரியா படிக்க மாட்டேங்கிறா? அவங்க வீட்டில என்ன பிரச்சனையோ? அவளை சரி செய்வதற்கு என்ன செய்யலாம்?" எனப் பேசிக் கொண் டிருந்தார்கள். ஒவ்வொரு மாணவரையும் சிறந்தவராக்கும் முயற்சியில் அவர்கள் பாடுபட்டனர்.

ஒரு நாள் என் வகுப்பு ஆசிரியர் எங்களுடைய வகுப்பில், "உங்களை யாரும் நேசிக்கவில்லை என்று கவலைப்படா தீர்கள். உங்களை உண்மையான அன்போடு நேசிக்க

நாங்கள் இருக்கிறோம்'' என்று சொன்னபோது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. நான் விடுதியில் தங்கி யிருந்த நான்கு வருடங்களாக அவர்கள் வீட்டிலிருந்து எனக்கு உணவு கொண்டுவந்து கொடுத்தார்கள். எனக்கு ஊக்கம் அளித்து இந்த அளவுக்கு ஆளாகிடத் துணைநின்ற அந்த நான்கு ஆசிரியர்களையும் நன்றியோடு நான் நினைத்துப் பார்க்கிறேன்.

ஒரு வாரத்திற்கு முன்பு ஒரு மாணவியைச் சந்தித்தேன். என்னால் என் படிப்பைத் தொடர முடியவில்லை என்று என்னிடம் கூறி அழுதாள். என்ன காரணம் எனக் கேட்ட போது, ''நான் 10ஆம் வகுப்பில் 440 மார்க் எடுத்திருக்கேன். 11ஆம் வகுப்பில் 1121 மார்க் எடுத்திருக்கேன் அக்கா. ஒரு தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த பெண்ணான நீ இவ்வளவு மார்க் எடுக்க வாய்ப்பில்லை. நீ நிச்சயம் காப்பி அடிச்சிருப்பன்னு சொல்லி என்னை அடித்துச் சித்ரவதை செய்தாங்க எங்க ஆசிரியர்கள்'' என்றாள். ஏதோ சாக்குப் போக்குச் சொல்லி கடைசியாக அந்த மாணவியை பள்ளியை விட்டே அனுப்பிவிட்டார்களாம். இன்று அந்த மாணவி தனது படிப்பைத் தொடர முடியாமைக்கு அந்த ஆசிரியர்களே காரணம். ''பிராக்டிகல் மார்க் போடணும்னா, நான் சொல்றபடி நட!'' என்று மாணவிகளை மிரட்டி பாலியல் தொந்தரவு செய்யும் ஆசிரியர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.


சமீபத்தில் சென்னையில் ஒரு தனியார் பள்ளியில் படிக்கும் ஒன்பதாம் வகுப்பு மாணவனைக் குறித்து அவனது ஆசிரியர் பெற்றோரிடம் புகார் கூறினார் என்று கோப மடைந்த அவன், வகுப்பறையிலேயே தனது ஆசிரியரைக் கத்தியால் குத்திக் கொன்றுவிட்டான். இந்தச் செய்தி எல்லோரையும் பதற வைத்தது. எங்கே செல்கிறது மாணவச் சமூகம் என்று யோசிக்க வைத்திருக்கிறது. பதினான்கு வயது மாணவன் தனது ஆசிரியரைக் கத்தியால் குத்திக் கொல்லும் அளவுக்கு அவனுக்குத் தைரியம் எங்கிருந்து வந்தது. அந்தத் தைரியத்திற்குப் பின்னாலிருந்த கோபமும் வெறுப்பும் என்ன காரணத்திற்காக வந்தது என்று ஆய்வு செய்ய வேண்டும்.

சூழ்நிலையே மனிதர்களை உருவாக்குகிறது. தவறான சூழ்நிலையை உருவாக்கிவிட்டு அவன் மாற வேண்டும், அன்பாக இருக்க வேண்டும், பண்பாக இருக்க வேண்டும் என்று சொல்வது வேடிக்கையாகத்தான் இருக்கிறது. பெற்றோர்களுக்குக் கவுரவம் வேண்டும் என்பதற்காக பண வேட்டையைத் தொடர்கிறது அவர்களின் பயணம். சிறந்த பள்ளியாக வேண்டும் என்பதற்காக மதிப்பெண்களை நோக்கித் தொடர்கிறது ஆசிரியர்களின் பயணம். வீட்டில் தனியாக அமர்ந்திருக்கும் மாணவர்களின் பயணம் தொலைக்காட்சியை நோக்கிப் பயணிக்கிறது. அழகாக, மிக அருமையாக வன்முறையையும் காதலையும் காமத்தையும் ஏமாற்றுவதையும் சொல்லிக் கொடுக்கிறது தொலைக்காட்சி. இதைக் கற்றுக்கொண்ட மாணவர்கள் தம் வாழ்வில் பயன்படுத்தப் பார்க்கிறார்கள்.

பத்திரிகைகளில் பல சம்பவங்களைப் பார்க்கும்போது, அனுதாபத்தையும் ஆத்திரத்தையும் ஒரு சில வார்த்தைகளில் கொட்டிவிட்டு நம் வேலைகளைத் தொடருகிறோம். இந்தச் சம்பவம் என் வீட்டிலும் நடக்கும். எனவே இந்தப் பிரச்சனைக்கான மூல காரணமென்ன என்ற தேடுதலில் ஈடுபட யாருக்கும் நேரமில்லை.

எங்களுக்குக் கிடைத்த ஆசிரியர்களுக்கு எங்களைக் குறித்து யோசிக்க நேரம் இருந்தது. எங்கள் சூழலை மாற்ற முயற்சி செய்தார்கள். அவர்களின் முயற்சி எங்களை உருவாக்கியது. நான் படிக்கும்போது எந்த ஒரு ஆசிரியரையும் குறை சொன்னது கிடையாது. ஆசிரியர்களை மதித்தும், இன்றைக்குப் பலரை வாழ வைத்துக் கொண்டிருக்கிறோம்.

எனவே மாணவர்களே, ஆசிரியர்கள் நமக்கானவர்கள். நமக்கு அறிவு சொல்லிக் கொடுக்க வந்தவர்கள் என்பதை உணர்ந்து, அவர்களை மதிக்கும்போதுதான் நாம் அறிவுள்ளவர்களாகவும் பண்புள்ளவர்களாகவும் வளர்வோம்.



தாழ்வு மனப்பான்மையைப் போக்க....

இந்தக் கேள்வியை மாணவர்கள் என்னிடம் கேட்கும்போது எனக்குச் சிரிப்புதான் வந்தது. ஏன் என்றால்? கருப்பு என்ற பெயரில் நானும் கூட பல வருடங்கள் நிராகரிக்கப்பட்டு இருக்கிறேன். பள்ளிக்கூடங்களில் எல்லா மாணவர் களுக்கும் பட்டப் பெயர் வைப்பது வழக்கம் என்னை எல்லோரும் கருப்பி, நெல்சன் மண்டேலா பொண்ணு, நீக்ரோ என்று அழைப்பது உண்டு.

கிட்டத்தட்ட 8 வருடம் என்னை ஏன் எல்லோரும் வெறுக் கிறார்கள். இந்த உலகத்தில் நான் மட்டும்தான் அசிங்கமாக இருக்கிறேனா? என்பதை நினைத்து அழுது இருக்கிறேன், புலம்பி இருக்கிறேன். என் பெற்றோர் கேரளாவுக்கு புலம்பெயர்ந்த தமிழர்கள். மற்றவர்கள் என்னைப் பாத்தவுடன் எந்த ஊர் என்று கேட்பார்கள். நான் கேரளா என்று சொன்னவுடன், “கேரளா பொண்ணா! இவ்வளவு அசிங்கமாவா?” என்று கேலி செய்வார்கள். ஆழமான தாழ்வு மனப்பான்மையை எனக்குள் உருவாக்கியது. நானும் விதவிதமான hair style செய்து பார்த்து இருக்கிறேன்.

விதவிதமான உடைகளும் அணிந்து பார்த்து இருக்கிறேன். கடைசியில் இந்த மூஞ்சிக்கு இப்படி ஒரு style தேவையா என்ற ஏளன பேச்சுதான் மிஞ்சியது. ஒரு நாள் கருப்பின மக்களின் விடுதலைக்காகப் போராடிய நெல்சன் மண்டேலாவின் புத்தகத்தை படித்தேன். அதில் சில வரிகள் என் வாழ்வில் திருப்புமுனையாக அமைந்தது.

“உன் திறமைகளை நீ வெளிப்படுத்தும்போது இந்த உலகம் உன் தோற்றத்தை மறந்துவிடும்” என்ற வரிகள் என் மனதிற்குள் ஆழமாக பதிந்தது. அன்றிலிருந்து ஒரு நாள் கூட நான் கருப்பாக இருக்கிறேன் என்றும் என் புறத் தோற்றத்தைப் பற்றியும் கவலைப்பட்டதில்லை. எத்தனையோ, பயிற்சிகளில் மாணவர்கள் என்னிடம் சொன்ன விஷயங்கள், “அக்கா நான் அழகா இல்லைன்னு என்னை யாருக்குமே பிடிக்கலக்கா..., எனக்கு பல்லு ரொம்ப எத்தியிருக்கு (நீளமாகயிருக்குனு) கேலி பண்றாங்க..., திக்கு வாயின்னு ஏளனம் பண்றாங்க, நான் கருப்பு என்று என்னை ஒதுக்குறாங்க... சின்ன வயசிலேயே என் முடி நரைச்சுப் போச்சு, மனசு ரொம்ப கஷ்டமாயிருக்கு...

என பல்லாயிரம் கேள்விகள் என்னை நோக்கி வந்தன. அனைவருக்கும் சொல்லும் ஒரே ஒரு பதில் அழகு என்பது நம் தோற்றத்தில் இல்லை. நம் செயலில், எண்ணங்களில், வார்த்தைகளில் மற்றும் நம் மனதில் இருக்கிறது. ஆனால் அழகைக் குறித்து இந்தச் சமூகம் நமக்கு ஒரு செய்தியை முன்வைக்கிறது. ஒரு பெண் என்பவள் பொட்டு வைத்து, பூச்சூடி, புடவை அணிந்து அடக்கமாகயிருப்பதுதான் அழகு என்று சமூகத்தால் திணிக்கப்பட்டுள்ளன. அதையும் தாண்டி, ஒரு பெண்ணுக்கு உடல் அவையங்கள் கூட இப்படித்தான் இருக்க வேண்டும் என்று ஊடகங்கள் சொல்லுகின்றன. உதாரணமாக, ‘மீனா கண்ணு மாதிரி, சிம்ரன் இடை மாதிரி, ரம்பா தொடை போல இருக்க வேண்டும்’ என்று பெண்களின் சுயத்தைச் சாகடிக்கிறார்கள்.

இந்தக் கருத்தியலை உள்வாங்கிய பெண்கள், விதவிதமான நகைகள் போடவேண்டும்; அழகான உடை உடுத்த வேண்டும்; தன் முகத்தை அழகுபடுத்த கண் மை, லிப்ஸ்டிக், நெய்ல் பாலிஷ், கீரிம், பவுடர் ஆகியவை பயன்படுத்த வேண்டும் என்றும், விதவிதமான செருப்பு போட வேண்டும் என்றும் ஆசைப்படுகிறார்கள்.

இதன் விளைவு எத்தனையோ பியூட்டி பார்லர்கள் வந்து விட்டன. இதன் மூலம் தோற்றத்தில் அழகை உருவாக்கி விட்டார்கள். ஆனால், அகத்தோற்றத்திலும், அறிவுத் தோற்றத்திலும், தன்னம்பிக்கை இழந்து கோழைகளாகி விட்டனர். தைரியமும் தன்னம்பிகையும், உன் அறிவும்தான் உனக்கு பாதுகாப்பே தவிர, உன் தோற்றமல்ல.

நீ தனியா போகும்போது உன்னை யாராவது, கேலி செய்து உன்னை பாலியல் தொந்தரவு செய்தால் உன் தோற்றமோ, உன் அழகோ, உன் நகையோ உன்னை காப்பாற்றாது. உன் அறிவும், உன் புத்திசாலித்தனமும்தான் உன்னைக் காப்பாற்றும்.

நம்ம வாழ்க்கையில் எது வேண்டுமானலும் நடக்கலாம். தேர்வு எழுதுகிற நேரத்தில உடம்பு சரியில்லாமல் போய் தேர்வில் பெயில் ஆகிடலாம். ஏதோ விபத்தில் நம்ம அப்பா அம்மா செத்துப் போய்விடலாம். நிரந்தரமற்ற வாழ்க்கையில் எதுவேண்டுமானாலும் நடக்கலாம். எது நடந்தாலும் நாம் வாழ வேண்டும் என்ற நம்பிக்கை வேண்டும்.

என்னடா! இவங்க பயமுறுத்துறாங்கனு தயவுசெய்து நினைத்துவிடாதே. கோயம்பேடு பஸ் ஸ்டாப்பில் இருந்து ஆட்டோவில் போய்க்கொண்டிருந்தேன். முன்னாடி பைக்ல ஒரு ஆள் போய்க்கிட்டுயிருந்தாரு. ஒரு கல் இடர, தடுமாறிக் கீழே விழுகிறார். ப்ரேக் போட முடியாமல் பின்னாடி வந்த கார் அவர் மேல ஏறியிருச்சு. கொஞ்சம் யோசித்துப் பார். காலையில் மகிழ்ச்சியா வழி அனுப்பிவிட்டு ஆபிஸ்க்கு போன தன் புருஷன் பிணமா வீட்டுக்கு வந்தா எப்படி இருக்கும் ஒரு பெண்ணுக்கு.

எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட 219 விதவைத் தாய்மார்களுக்கு, ஆளுமை என்ற தலைப்பில் பேசி கொண்டிருந்தேன். மெதுவாக ஒரு 19 வயது பெண் உள்ளே வந்தாள். தயங்கி தயங்கி நின்று கொண்டிருந்தாள். “சாரிமா, இது வேற வகுப்பு நீ வகுப்பு மாறி வந்திட்ட” என்றேன். “இல்ல

மேடம் நானும் எய்ட்ஸ் பாதிக்கப்ப்ட்ட விதவை பெண்தான்" என்று கதறி அழும் போது மயங்கி கீழே விழுந்து விட்டாள்.

இதெல்லாம் ஏதோ கற்பனை கதையில்ல பாப்பா. நீ தைரியத்தோடும், தன்னம்பிக்கையோடும் வாழ வேண்டும் அதற்காக இதை எழுதுகிறேன்.

எனவே, வாழ்வில் முன்னேற தோற்றம் உனக்குத் தடையில்லை. உன்னை, உன் ஆற்றலை, உன் திறமையை வெளிப்படுத்து. இந்தச் சமூகம் உன் காலடியில்.



மனதில் இனம்தெரியா வேதனை

“அறியாமையுடன் ஒருவன் நூறு ஆண்டு வாழ்வதை விட, அறிவுடன் ஒரு நாள் வாழும் வாழ்க்கையே மேலானது”

பல பயிற்சிகளில் மாணவர்கள் சொல்லுவார்கள்-

“என்னனு தெரியல மனசு ரொம்ப கஷ்டமா இருக்கு” - இந்த வார்த்தைகளை பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

“மனசு கஷ்டமாயிருக்கு, மனசு பாரமாயிருக்கு, செத்தரலாம் போல இருக்க” என்ன செய்யறேன்னு தெரியல எப்படி வாழ்வதுன்னே தெரியல என்று. இதில் இருந்து என்ன புரிகிறது என்றால் மனித வாழ்வில் மனம் முக்கிய பங்காற்றுகிறது.

ஏம்மா கோயிலுக்கு போறிங்கன்னு? கேட்டா அவர்கள் சொல்வார்கள், “மனம் நிம்மதிக்காகத்தான்” என்று.

ஒரு மாதத்திற்கு முன்பு சுமார் 700 மாணவ, மாணவிகளிடம் தலைமைப் பண்பு பற்றி பேச என்னை அழைத்தார்கள். அங்கே, நான் மாணவிகளிடம் கேட்டேன்.

“உங்கள் மனம் எங்கு இருக்கிறது?”

முதலாவதாக ஒலித்த குரல் நகை.

இரண்டவதாக ஒலித்த குரல் விதவிதமான உடைகள்.

மூன்றாவதாக ஒலித்த குரல் செல்போன்.

நான்காவதாக ஒலித்த குரல் காதல்.

ஐந்தாவதாக ஒலித்த குரல் படிப்பு.

முதலில் வரவேண்டியது கடைசியாக வருகின்றதே என்று நான் கேட்டபோது எல்லோர் மனதிலும் வெட்கம் கலந்த சிரிப்பு. ஆனால், எனக்கோ அந்த சிரிப்பு, மிகுந்த வேதனையைத் தந்தது இதே கேள்வியை மாணவர்களிடம் தொடுத்தேன். அவர்கள்

முதலாவதாக ஒலித்த குரல் காதல்.

இரண்டவதாக ஒலித்த குரல் செல்போன்.

மூன்றாவதாக ஒலித்த குரல் போதை பொருள்.

நான்காவதாக ஒலித்த குரல் படிப்பு.

சமூகத்தின் தலையெழுத்தைத் தீர்மானிக்கிற மாணவ சமூகத்தின் மனம் இதை நோக்கிய பயணத்தில்தான் தொடங்குகிறது என்பது உண்மை.

மாணவிகள் நல்ல உடை உடுத்தி நகை அணிந்து கையில் செல்போன் வைத்துக்கொண்டு சூப்பரா காதல் செய்கிறார்கள். மீதி நேரத்தில்தான் படிக்கிறார்கள். இது என் வாக்குமூலம் அல்ல.

மாணவர்கள் காதல் செய்வதற்காக, செல்போனை பயன்படுத்திக்கொண்டு காதலியின் போதையில் இருக்கிறார்கள். மீதி நேரத்தில் படிக்கிறார்கள், என்பது மாணவர்களின் வாக்கு.

கல்லூரிக்குப் படிக்க வந்த மாணவ / மாணவிகள் இப்படிச் சொல்வதற்கான காரணம் என்ன? அவர்கள் தன்னை அறிந்து கொள்வதில்லை.

**உணர்தல்:** வாழ்க்கையில் மிகவும் முக்கியமான விஷயம் நம்மை உணர்வது அல்லது நம்மைப் பற்றித் தெரிந்து கொள்வது.. நம்மை இயக்குவது நம் மூளை. எப்படி உடல் ஆரோக்கியமாக இருக்க உடல் பயிற்சி தேவையோ அதை போல மனம் உறுதியாக, தெளிவாக இருக்க நம் மூளைக்கு சரியான பயிற்சி கொடுக்கவேண்டும். நாம் என்ன

நினைக்கிறோம் என்பதும், நாம் எதை பேசுகிறோம் என்பதிலும் கவனமாகயிருக்க வேண்டும். மகிழ்ச்சியான வாழ்க்கை வாழும் அத்தனை பேரும் தன் மனதைக் கட்டுக்குள் வைத்திருந்தவர்கள். மனித உடல் ஒரு கம்ப்யூட்டர் போல நாம் என்ன தகவல்களை ஒரு கம்ப்யூட்டருக்குத் தருகிறோமோ அதை தான் நாம் அந்த திரையில் பார்க்க முடியும்.

நீ ஒரு தவறான தகவலை உன் ஆழ்மனதிற்குக் கொடுத்தால் உன் ஆழ்மனம் அதை நோக்கி உன்னை நகர்த்தி செல்லும். வார்த்தைக்கும், எண்ணத்திற்கும் ஒரு தொடர்பு உண்டு. மனதை நாம் எப்படி தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டுமோ, அதை போல் வார்த்தையைக் கையாள கற்றுக்கொள்ள வேண்டும். நல்ல எண்ணம் நம்மை நல்ல செயல்பாட்டுக்கு இட்டுச் செல்கிறது. ஆக, மனதைத் தன் கட்டுக்குள் வைக்க யோகா, தியானம் போன்ற பல பயிற்சிகள் இருக்கிறது. அதை நீங்கள் கற்று தெரிந்து கொள்ளுங்கள். மனதை அழகாக கையாளுங்கள்..

மனிதனின் குற்றங்களில் பெரும்பாலானவை அவன் நாவிலிருந்துதான் பிறக்கின்றன. - நபிகள் நாயகம்

**அறிவு:** அறிவு என்பது தகவலைச் சேகரிப்பது இல்லை புத்தகங்களை மட்டும் படித்துத் தெரிந்துகொள்வது இல்லை. அறிவு என்பது ஒரு தேடல்... அதுவும் தாகத்தோடு தேடும் தேடல். புதிய கண்டுப்பிடிப்புகளை நாமாக தேடி கண்டுபிடிப்பதே அறிவு. அறிவு, என்பது புத்தகங்களி லிருந்து அறிந்துகொள்வது, சமூகத்திலிருந்து அறிந்து கொள்வது, தன் சொந்த அனுபவத்திலிருந்து அறிந்து கொள்வது, இந்த அறிவுத் தேடல் ஒவ்வொரு மனிதருக் குள்ளும் இருக்கும்போதும் அவனுக்கு இன்னும் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தோன்றும் அவனுள்தான் என்ற அகம்பாவம் இல்லாமல் போகும். நான்

கற்றுக்கொள்ளும் நிலையில் இருக்கிறேன் என்று எண்ணுபவன் சிறந்த சாதனையாளராக மாறுவான்.

**உடல் ஆரோக்கியம்:** இன்றைக்கு வளர்ந்து வரும் இளம் மாணவியர் பெரும்பாலும் சத்துக்குறைபாடு உள்ளவர்களாகவே இருக்கிறார்கள். இவர்களின் உடல் பலவீனத்திற்கு என்ன காரணம் என்று ஆராயும்போது, ஒருவர் கூட முறையாக உணவு உண்பது இல்லை. உளவியலாக ஒவ்வொரு பெண்ணுக்குள்ளும் நான் அழகா ஒல்லியாக இருக்கவேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியுள்ளது. உதாரணமாக, எந்தக் காய்கறிகளையும் மாணவிகள் விரும்புவதில்லை. அதனால்தானோ என்னவோ திருமணத்திற்கு பிறகு பிரசவத்தில் 100%க்கு 90% அறுவை சிகிச்சை ஆகிவிடுகிறது. பேஷன் என்ற போர்வையில் உடலைத் தானே அழித்துக்கொண்டு நிச்சயமாக சாதிப்பேன் என்று கூறும் மாணவிகளைப் பார்த்தால் கோபம்தான் வருகிறது.

மாணவர்களும் குடி, சிகரெட், போதை போன்ற பல தீய பழக்க வழக்கங்களில் ஆளாகி தன் உடலைக் கெடுத்து கொள்கின்றனர்.

**மன ஆரோக்கியம்:** மனம் ஆரோக்கியமாக இருக்க மனதில் உள்ள துக்கங்களையும், பயத்தையும் அகற்ற வேண்டும். சில நேரத்தில் உன் ஃப்ரண்டோட முகம் சோர்வாக இருக்கும் போது, “என்ன ரொம்ப டல்லா இருக்க; மனசு சரியில்லையா, கஷ்டமாயிருக்கா?” என்று கேட்கிறோம். மனசு சரியில்லை என்றால் அது உடம்பைப் பாதிக்கிறது என்பது உண்மை. உன் மன வேதனைக்கு இரண்டே காரணம், மனசில பயம் இருக்கும் இல்லனா துக்கம் இருக்கும். ஏன் மனசில பயம் வந்தது, என்ன காரணம் என்று நீயே கண்டுபிடி. அதைப் போல உன் மன துக்கத்திற்கு என்ன காரணம். இந்த பயத்தாலும் துக்கத்தாலும் என்ன மாதிரியான விளைவுகளை நான் எதிர்கொள்ளப் போகிறேன் என்று யோசி, அதற்கான தீர்வைத் தேடு.

தேர்வில் அதிக மதிப்பெண் பெற்றால், நான் நினைத்த படிப்பு.

அதிக மதிப்பெண் பெறவில்லையென்றால் கிடைத்த படிப்பு.

எதுவானாலும் நன்றாகப் படிப்பேன் என்று நினைத்தால் வெற்றியும், மகிழ்ச்சியும் உறுதி.

வாழ்க்கையில் நான், காதலித்தவன்/காதலித்தவள் கிடைத்தால் நான் நினைத்த வாழ்க்கை!

காதலித்தவன்/காதலித்தவள் கிடைக்கவில்லை என்றால் புதிய வாழ்க்கை! என்று நினைத்தால் வெற்றியும் மகிழ்ச்சியும் உறுதி!!!

நீ செய்யும் எந்தச் செயலிலும் நன்மை தீமைகளை ஆராயக் கற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யும்போது பயமும், துக்கமும் இல்லாமல் போய்விடும்.

எனவே உடலையும், மனதையும் ஆரோக்கியமாக வைத்துக்கொள்ளுங்கள். பொதுவாக மனதை மலரோடு ஒப்பிடுவார்கள். மலர் போல மலர்கின்ற மனம் வேண்டும் தாயே என்ற பாடல் வரிகளைக் கேட்டிருக்கிறேன். மனதை ஏன் மலரோடு ஒப்பிடுவார்கள்.

மலரின் அழகு கண்களால் ஈர்க்கப்படுகிறது!

மலரின் மணம் மூச்சாய் சுவாசிக்கப்படுகிறது!

மலரின் தன்மை ரசிக்க தூண்டுகிறது!

மலரின் படைப்பு போற்றப்படுகிறது!

மலரின் தனித்துவம் பரிசாக்கப்படுகிறது!

மலரின் மரணம் செயற்கை மலராய் நினைவுக் கூறப்படுகிறது!

மலர் மனிதனுக்கு மருந்தாகவும் பயன்படுகிறது!

மனிதர்களையும் கோவில்களையும் அலங்கரிக்கப் பயன்படுகிறது!

இவ்வளவு குணங்களைக் கொண்ட மலர் மிகவும் மென்மையானது. மென்மையான மலரை மற்றவர்கள் நாசம் செய்துவிட கூடாது என்று இயற்கையே மலருக்கு பாதுகாப்பாக இருக்கிறது. பெரும்பான்மையான மலரைப் பறிப்பது சற்று கடினமாகத்தான் இருக்கும். சில மலர்களைச் சுற்றி நெருக்கமான முட்கள் இருக்கும்.

மலரை போல உன் மனதை மென்மையாகவும், மலரை முள் காப்பது போல....

உன் மென்மையான மனதைக் காக்க அறிவு பயிற்சி என்னும் முள்ளை வைத்து நம்பிக்கையோடும், மகிழ்ச்சியோடும் மனதையும் உடலையும் ஆரோக்கியமாக நீ வைத்து கொண்டால்,

உன் குணம் ஈர்க்கப்படும், சுவாசிக்கப்படும்!

உன் அறிவு போற்றப்படும், பரிசாக்கப்படும்!

உன் வார்த்தை மனித வாழ்க்கையை அலங்கரிக்கும்!

உனக்கு மரணம் கிடையாது நீ வாழ்ந்து கொண்டிருப்பாய்!

**"மனதையும் உடலையும் ஆரோக்கியமாக வைத்துக் கொள்வபவர்களே சாதனையாளர்கள்"**

**- டாக்டர் அம்பேத்கர்**



மாணவர்களே காதலியுங்கள்!

**“செய்து முடிக்கப்பட்ட மாபெரும் சாதனைகள் அனைத்தும் செய்ய முடியாதவைகள் என்று முதலில் பலரால் நிராகரிக்கப்பட்டவை” - கன்பூசியஸ்**

காதலிப்பதற்கு யாரும் கற்றுக் கொடுப்பது இல்லை. ஆனால், ஒவ்வொரு மனிதனும் காதலிக்கக் கற்றுக் கொள்கிறான். காதலிக்க மட்டும் கற்றுக்கொள்ளவில்லை, காதலுக்காக பெற்றோரையும், ஆசிரியர்களையும் ஏமாற்றுகிறார்கள். நண்பரை ஏமாற்றுகிறார்கள், காமத்துக்காக தன் காதலியையே ஏமாற்றுகிறார்கள் தன் காதலனை ஏமாற்றுகிறார்கள். யாருமே கற்றுக்கொடுக்காத ஒரு காதலை மிக நேர்த்தியாக நீ கற்றுக்கொள்ளும்போது உன் அறிவை வளர்த்து கொள்ள, உன் இலட்சியத்தை அடைய, உன் பெற்றோரின் கண்ணீரை துடைக்க, அனைவரும் கற்றுக் கொடுக்கும் கல்வியையும், அறிவையும் நீ ஏற்க மறுப்பது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

ஒவ்வொரு மாணவர்களும் நான் நன்றாகப் படிக்க வேண்டும் என்று ஆசைப்படுவார்கள். மாணவர்களிடம் நீங்கள் என்னவாக ஆசைப்படுகிறீர்கள், உங்கள் இலக்கு என்ன என்று கேட்டால் சொல்வார்கள், I.A.S., I.P.S, டாக்டர், பொறியாளர், பைலட், டீச்சர் என உன் இலக்கு எதுவானலும் அது அடைய நீ படிக்க வேண்டும். உன் மனம் மகிழ்ச்சி யாக இருந்தால்தான் நீ படிக்க முடியும். மகிழ்ச்சியாக இருக்க உன் உடலும் உன் மனமும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். அதற்கு அடிப்படையான நம்பிக்கை

உனக்குள் இருக்க வேண்டும். நம்பிக்கை இருக்க வேண்டிய மனதில் பயம் இருந்தால் நீ உன் இலக்கை அடைய முடியாது. பயம் போக்க அறிவை தேட வேண்டும். உனக்குள்ளும், உன் மனதிற்குள்ளும், உன் உடம்பிலும் ஏற்படும் மாற்றங்களையும் உனக்கு வெளியே, சமூகத்தில் நடக்கும் நிகழ்வுகளையும் நன்கு அறிய வேண்டும்.

ஒவ்வொரு மாற்றத்திற்காக காரண காரியங்களைக் (Cause & Effect) கண்டறிந்து நீ நடந்து கொண்டால் பயம் உன்னைவிட்டு தூர போய் வெற்றி உன்னை நோக்கி வரும்.

நம்மைச் சுற்றி திரும்பி பார்த்தால் தெரு ஓரத்தில் ஆயிரம் குழந்தைகள் படிக்க வசதி இல்லாமல் தீப்பெட்டி தொழிற் சாலையிலும், செங்கல் சூளையிலும், பனியன் கம்பெனியிலும், தூக்கி எறியப்பட்ட ஆயிரம், ஆயிரம் மாணவ மாணவிகள் உன் கண்ணெதிரே நீ பார்க்க மறந்தது ஏனோ? எனக்கு தெரியவில்லை.

உன் காதலைப் பற்றி மட்டும் சிந்திக்கிறாயே. உன்னைச் சுற்றி பார்! நீ வாழும் சமூகம் எப்படி இருக்கிறது. ஒரு தனி மனிதன், தான் பணக்காரனாக வேண்டும், என்னை இந்த உலகம் பாராட்ட வேண்டும் என்பதற்காக, தான் படித்த கல்வியை, தன் அறிவைச் சுயநலத்திற்காக பயன்படுத்து கிறான்.

இயற்கையைப் பார்த்து ரசித்திருப்பாய்!
நிலவைப் பார்த்து ஆறுதல் அடைந்திருப்பாய்!
காற்றைச் சுவாசித்து தென்றலை
உணர்ந்து கவிதை எழுதியிருப்பாய்!
மழை துளியும், மண்ணும் முத்தமிடும்போது,
மண் வாசனையை ரசித்திருப்பாய்!
இயற்கையான தண்ணீர் உன்
தாகத்தைத் தீர்த்திருக்கும்!
இயற்கையை நண்பனாகவோ!
சில பேர் தன் காதலியாகவோ!

நேசித்திருப்பார்கள். ஆனால் இன்று மனிதர்கள் தன் சுயநலத்திற்காக காடுகளையும், மரங்களையும் அழித்து கொண்டிருக்கிறார்கள், இன்று விவாசாயிகளுக்கு உடனே பணம் வேண்டும் என்பதற்காக ரசாயன உரங்களைப் பயன்படுத்தி, நிலத்தை மலட்டுதன்மையாக்கி, விஷம் கலந்த செயற்கை உரத்தாலான காய்கறிகளையும், நெல் வகைகளையும் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள்.

முதலாளிகள், தங்கள் பணத்தை முதலீடு செய்ய ரியல் எஸ்டேட் பிஸ்னஸ் செய்து, விளை நிலங்களை எல்லாம், விலை நிலங்களாக மாற்றி வீடு கட்டி, வித்து சம்பாதிக் கின்றனர். பெரும் நகரங்களில் வெயில் காலம் வந்தால் கம்பங்கூழ், கேழ் வரகு, தர்பூசணி என விற்பதுண்டு. ஒரு மாணவி சொன்னாள்.

“விளை நிலங்கள் எல்லாம் கட்டிடங்களாய் மாறிவிட்டால் அரிசிக்கும், பழங்களுக்கும், காய்கறிக்கும், கீரைக்கும் எங்கு போவது? மனிதர்கள் எப்படி ஆரோக்கியமாக வாழ முடியும்? என்றாள்.

நிலத்தில் எரிக்கப்படும் பிளாஸ்டிக் பொருள்கள் காற்றோடு கலக்கிறது பல பெரிய ஆலைகளிலிருந்து வரும் புகை காற்றோடு கலந்து சுவாசிக்கும் காற்று தூய்மையற்ற தாகி விட்டது.

தண்ணீர் இயற்கை நமக்கு கொடுத்த வரம். ஆனால், இன்னைக்கு தண்ணீரிலும் கூட ரசாயனம் கலந்துவிட்டது. பணம் வைத்திருப்பவர்கள் பாட்டில் தண்ணீர் வாங்கி கொள்வார்கள். பணம் இல்லாத ஏழைமக்களுக்கு இன்னும் கொஞ்சம் காலத்தில் தண்ணீர் பெரும் பிரச்சனையாய் இருக்கும். தொழில் சாலைகளிலும், தோல் நிறுவனங் களிலும், சாயப்பட்டறைகளில் இருந்து வெளியாகும் கழிவு நீர் தண்ணீரோடு கலந்து தண்ணீரும் தூய்மையற்றதாகி விட்டது. தனி மனிதர்கள்தான், இப்படி தன்னை வளப்படுத்திடக் கொள்ளையடிக்கிறார்கள்” என்றால்,

சமூகமும் இப்படித்தான் இருக்கிறது. சாதியாலும், மதத்தாலும், ஆண், பெண் வேறுபாடுகளும் நிறைந்த இந்த சமூகத்தில்தான் நீ வாழ்ந்து கொண்டிருக்கின்றாய். ஒருவரை ஒருவர் அன்போடு ஏற்றுக்கொள்ளுதல் என்பது மிகவும் கடினமாகத்தான் இருக்கிறது. ஏதோ எதிர்ப்பார்ப்போடுதான் மனித உறவுகள் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

“குழந்தைகள் நன்றாக படிக்க வேண்டும்” - பெற்றோர்

“பெற்றோர் நான் கேட்கும் போதெல்லாம் பணம் கொடுக்க வேண்டும்” - குழந்தைகள்.

“என் கணவன் என்னை நேசிக்க வேண்டும், என் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்!” - மனைவி.

“என் மனைவி என்னை மட்டும் நேசிக்க வேண்டும்” - கணவர்.

“எனக்கு விசுவாசமாகவும் உண்மையாகவும் இருக்க வேண்டும்” - அரசியல்வாதி.

“என் தலைவர் எனக்கு ஏதாவது செய்வார்” - தொண்டர்.

“என் கம்பெனி நம்பர்-1 கம்பெனியாக இருக்க வேண்டும்” - முதலாளி

“நல்ல சம்பளம் வேண்டும்” - தொழிலாளி.

இப்படி மனித உறவுகளுக்கு இடையே பிணைப்பும், எதிர்பார்ப்பும், சார்புத் தன்மையும் இருக்கிறது. இந்த எதிர்பார்ப்பு நிறைவேறாதபோது மனிதர்கள் மிருகங்களாக மாறி விடுகிறார்கள். இவ்வளவு கொடுமைகளும், வேறுபாடுகளும், முரண்பாடும் நிறைந்த இந்தச் சமூக அமைப்பில் நீ மகிழ்ச்சியாக வாழ வேண்டுமானால், அது எவ்வளவு கடினம் என்பதைச் சற்று யோசித்துப்பார். இவ்வளவு பிரச்சனைக்கும் உன்னால் ஒன்றுமே செய்ய முடியாவிட்டாலும், உன்னை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வது உன் கையில்தான் இருக்கிறது.

“ஆயிரம் கனவுகளோடு பெற்றோர்கள் என் விதி இப்படி ஆகி விட்டதே! என் குழந்தைகளின் தலையெழுத்தை என்னால் மாற்ற முடியும் என்ற நம்பிக்கையில் கடன் வாங்கி கூலி வேலை செய்து உன்னை பள்ளிகளுக்கும், கல்லூரி களுக்கும், அனுப்பி வைத்து இருக்கும் பெற்றோரின் கண்ணீரை என்றைக்காவது நினைத்துப் பார்த்ததுண்டா? நான் அடிக்கடி சொல்வதுண்டு நீ அணிந்திருக்கும் சட்டையை கசக்கி மோந்து பார். உன் பெற்றோரின் உழைப்பின் தியாகத் தின் இரத்த வாடை அதில் இருக்கும் என்று. படிக்க வேண்டிய வயதில் படிப்பில் கவனம் செலுத்தி உன் இலக்கை அடைந்த பிறகு நீ எதை வேண்டுமானாலும் செய். உன்னை கேட்பதற்கு யாரும் இல்லை. தயவுசெய்து பெற்றோர்கள்/ மற்றவர்களின் உழைப்பில் பொறுக்கித்தனம் செய்யாதே! ஏன் நான் இதை அழுத்தமாகக் கூறுகிறேன் என்றால்,

“அக்கா, அவள் நல்லவள் என்று நம்பி என் வாழ்க்கையைத் தொலைத்து விட்டேன்!”

“அவன், நல்லவன் என்று நம்பி ஏமாந்து விட்டேன். நான் சாகப் போகிறேன்” என்று தற்கொலைக்கு முயற்சி செய்த 167 மாணவர்களை எனக்கு தெரியும்.

மாணவர்களே! வாழ்க்கை புலம்புவதற்கு அல்ல; தன்னம்பிக்கை இழந்து நிற்பதற்கும் அல்ல; மனதில் வேதனைகளைச் சுமந்து நிற்பதற்கும் அல்ல!

“வாழ்க்கை வாழ்வதற்கு! உலகத்தை தன்வயப்படுத்த வேண்டும் என்று நினைத்து கொண்டு இருந்த அலெக்சாண்டர் அவர் தன் மரணத்திற்கு முன்பாக தன் நண்பர்களிடம் சொன்னாராம், “என் மரணத்திற்குப் பிறகு என்னை அடக்கம் செய்யும் முன்பு என் இரண்டு கைகளையும் விரித்து வையுங்கள்”

உலகத்திற்கே தலைவனாக வேண்டும் என்ற அலெக் சாண்டர் செத்த பிறகு எதையும் கொண்டு செல்லவில்லை என்று இந்தச் சமூகம் தெரிந்துகொள்ளட்டும். இதுவே நான் விட்டு செல்லும் செய்தி என்று சொன்னாராம்.


நான் சாகும்போது ஒன்றுமே எடுத்து செல்ல முடியாது என்று எல்லோருக்கும் தெரிந்திருந்தும் எதற்காக இந்த, கோபம், பண வெறி, காம வெறி, மற்றவர்களை ஏமாற்றும் குறுக்குப் புத்தி, நானும் என் குடும்பமும் மட்டுமே நன்றாக இருக்கவேண்டும் என்ற சுயநலத்தோடு மனித சமூகம் வாழ ஆரம்பித்ததிலிருந்து மனிதம் செத்து போய்விட்டது மனிதநேயம் குறைந்துவிட்டது. எனவே, இந்த மண்ணில் பிறந்த ஒவ்வொரு மனிதரும் அவரவர் உரிமையை இழக்காமல் சுயமரியாதையோடும் மகிழ்ச்சியோடும் வாழ இந்த தேசத்தை நல்லதொரு தேசமாக மாற்ற நாளைய தலைவரான இன்றைய மாணவர்களாகிய உங்கள் கையில்தான் இருக்கிறது. எனவே மாணவர்களே உன்னை அறிந்து, உன்னை மாற்றி, உன் ஆற்றலை வெளிப்படுத்து. உன்னை நிரூபிக்க, புதிய வரலாறாய் நீ வாழ காதல் செய்.

உன் காதலன் / காதலியோடு சேர்த்து,<br>
உன்னைக் காதலி - உன் திறமைகளைக்<br>
கண்டுகொள்வாய்,<br>
அறிவைக் காதலி - புத்தகங்களில் இடம் பெறுவாய்!<br>
பெற்றோரைக் காதலி - பாசத்தை கண்டுகொள்வாய்!<br>
இயற்கையைக் காதலி - தலைமுறை உன்னை வணங்கும்!<br>
தேசத்தைக் காதலி - வரலாறு உன்னைப் போற்றோம்!

இவையனைத்தையும் உண்மையோடு தாகத்தோடு நீ காதலித்தால் இந்தச் சமூகம் உன்னைக் காதலிக்கும்...

உன்னுடைய முயற்சியைப் பார்த்து ஏளனம் செய்யும், விமர்சனம் செய்யும் முகம் தெரியாத யாரோ ஒரு நான்கு பேருக்காக உன் வாழ்வை வீணாக்காமல் உன் முயற்சியை இன்றே ஆரம்பி; இப்போதே ஆரம்பி.

**நிரூபிக்கப்படும் வரை நிராகரிக்கப்படுவாய்!**<br>
**நிரூபி அங்கீகரிக்கப்படுவாய்"!**


அக்கா.
நான் கல்லூரி இரண்டாம் ஆண்டு படிச்சுகிட்டியிருக்கேன். என்னால படிப்புல சரியா கவணம் செலுத்த முடியல, மனசு கஷ்டமாயிருக்கு, எனக்கு ஏன் காதலிக்கனும்னு தோனுதுனே தெரியல, யார்கிட்டேயும் பகிர்ந்துகொள்ளவும் பயமாயிருக்கு. என் பெற்றோர் உட்பட எல்லோரும் காதலை ஏன் வெறுக்கிறாங்கனு தெரியல, என் உணர்வை யாரும் புரிந்துகொள்ள மாட்டேங்கிறாங்க, செத்துடலாம்போல இருக்கு அக்கா. நான் என்ன செய்ய? ப்ளீஸ் எனக்கு help பண்ணுங்க அக்கா.

சிவா.வே



உன் மனக் குழப்பத்திற்கும்
உனக்குள் எழும் கேள்விகளுக்கும்
இந்தப் புத்தகத்தின்
ஏதாவது ஒரு பக்கத்திலாவது
தீர்வு கிடைக்கும்

- வெளிச்சம் ஷெரின்